www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

CPI 100 Years
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
1925-2025

மலர் 87 | இதழ் 48 | 2025 மார்ச் 02 - மார்ச் 08 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15



## தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 27வது மாநில மாநாடு

# எழுச்சியுடன் பங்கேற்ற உழவர்கள்

### ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் நலநிதி வழங்கக் கோரி தமிழ்நாடு முழுவதும் மார்ச் 7ல் போராட்டம்

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 27 வது மாநில மாநாடு, தஞ்சாவூரில் டாக்டர் வே.துரைமாணிக்கம் நினைவரங்கில் பிப்ரவரி 20, 21 ஆகிய தேதிகளில் சிறப்புடன் நடைபெற்றது.**

26 வது மாநில மாநாடு நடைபெற்ற சேலத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட சங்கத்தின் கொடியை, மாநில துணைச் செயலாளர் எஸ்.நல்லைய்யா பெற்றுக்கொண்டார்.

வே.துரைமாணிக்கம் நினைவிடத்தில் இருந்து புறப்பட்ட நினைவுச்சுடர் பேரணியை தஞ்சை மாவட்டச் செயலாளர் முத்து. உத்திராபதி தொடக்கி வைத்தார். முன்னாள் எம்எல்ஏ கே.உலகநாதன் நினைவுச்சுடரை பெற்றுக்கொண்டார். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களில் ஒரத்தநாடு வட்டாரத் தோழர்கள் பங்கேற்றனர்.

பிரதிநிதிகளின் முழக்கங்களுடன் மாநாட்டுக் கொடியை தேசியக்குழு உறுப்பினர் அ.பன்னீர்செல்வம் ஏற்றிவைத்தார். தியாகிகள் நினைவுத்தூணில் முன்னாள் எம்எல்ஏ கோ.பழனிசாமி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பி.சீனிவாசராவ், அதுல்குமார் அஞ்சான், டாக்டர் வே.துரைமாணிக்கம், எம்.ஆதிமூலம், எம்.காத்தமுத்து ஆகியோரின் உருவப்படங்களை துரை.சண்முகம், சாமு. தர்மராஜ், எம்.கே.ஆறுமுகம், வி.மா.வீரப்பன், த.கண்ணப்பா ஆகியோர் திறந்து வைத்தனர்.

எஸ்.குணசேகரன் முன்னாள் எம்எல்ஏ, எம்.இலகுமய்யா, எஸ்.செல்லவேல் ஆகியோர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர். சி.எம்.துளசிமணி அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார். வரவேற்புக்குழு பொருளாளர் சோ.பாஸ்கர் வரவேற்புரை ஆற்றினார்.

அகில இந்தியத்தலைவர் இராஜன் கிஷ்சி சாகர் மாநாட்டைத் தொடங்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் ம.ராதாகிருஷ்ணன், விதொச மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர், எஸ்கேஎம் மாநில ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் சாமி.நடராஜன், மாதர் சம்மேளன மாநிலத் தலைவர் பி.பத்மாவதி முன்னாள் எம்எல்.ஏ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

சங்க பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலாமணி அரசியல் வேலை மற்றும் அமைப்பு நிலை அறிக்கையை முன்மொழிந்தார்.

சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து தலைமையில், மரபணு மாற்றுப் பயிர்கள் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த கருத்தரங்கில் அரிச்சலூர் செல்வம் கருத்துரை ஆற்றினார். தமிழக வேளாண் நிலையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தேவை குறித்து, விதொச அகில இந்தியத் தலைவர் என்.பெரியசாமி முன்னாள் எம்எல்ஏ பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், வேளாண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்துரைத்து மாநாட்டை நிறைவு செய்தார்.

மாநிலத் தலைவராக எஸ்.குணசேகரன், மாநிலப் பொதுச்செயலாளராக பி.எஸ். மாசிலாமணி, பொருளாளராக சிவ.சூரியன், துணைத் தலைவர்களாக எம்.லகுமையா, கே.உலகநாதன், சி.எம்.துளசிமணி, துணைச் செயலாளர்களாக த.இந்திரஜித், சி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக, மாவட்டத் தலைவர் இரா.இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

### மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

ஒன்றிய அரசு விவசாயிகளுக்கான டிஜிட்டல் அட்டைகள் வழங்கிடும் பதிவில் அனைத்து விவசாயிகளையும் சேர்த்திட வேண்டும். அதுவரை பத்திரப் பதிவு உள்ள விவசாயிகளை மட்டும் பதிவு செய்வதை நிறுத்திட வேண்டும்.

பிரதமர் நல நிதியை விடுபட்டவர்களுக்கும், குத்தகை விவசாயிகளுக்கும் ஆண்டுக்கு ரூ.12 ஆயிரமாக உயர்த்தி வழங்கிட வேண்டும்.

டிஜிட்டல் விவசாயத் திட்டத்தின்படி அரசின் மானியம், கடன், சலுகைகள் என அனைத்தும் பெற்றிட ஆதார் கார்டு போல், விவசாயிகளுக்கு பூஆதார் (Bhu-Aadhaar)

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்





### மாநிலச் செயலாளர் எழுதும் கட்சிக் கடிதம்

சர்வாதிகாரம், பாசிசம் தற்காலிக வெற்றிகளைப் பெறலாம். பெற முடியும். ஆனால் அதுவே நிரந்தரமல்ல. அவை வீழ்த்தப்படும், முறியடிக்கப்படும் என்பது உறுதியானது. ஜனநாயகமே இறுதியில் வெற்றி பெறும். அதுவே நிரந்தரமானது.

... பக்கம் 2

### அடாவடியாகப் பேசும் டிரம்ப், அமைதி காக்கும் 56 அங்குலம்

த.லெனின்

அமெரிக்கா நிதியுதவிகளை அளிப்பது சின்ன மீனைப் போட்டு பெரிய மீனை விழுங்கத் துடிக்கும் ஏகாதிபத்திய சுரண்டல் கொள்கையாகும். ஆனால், இதன் மூலம் பல லட்சம் கோடி ரூபாய்களை இந்தியாவில் இருந்து அமெரிக்கா சுருட்டியுள்ளது.

... பக்கம் 3

### என்ன விளையாட்டு இது?

தலையங்கம்

இந்தியாவிலேயே அதிகக் கோவில்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். இங்கு லட்சக்கணக்கில் மக்கள் கூடும் திருவிழாக்கள் எந்தச் சச்சரவும் இன்றி ஆண்டுதோறும் நடந்து கொண்டிருக்கின்றன. வடபுலத்தாரால் சிந்திக்கவே முடியாத மத நல்லிணக்கம் இங்கு உண்டு.

... பக்கம் 4

### மனித குலத்துக்கு எதிரான போர்கள்

வ.மணிமாறன்

உலகின் செல்வ வளம், வறுமை தொடர்பான கணக்கெடுப்புகளை வெளியிட்டு வரும் ஆக்ஸ்ஃபாம் நிறுவனம், மனிதகுலத்தின் பசிப் பிணியை ஒழிப்பதற்கு 3,200 கோடி டாலர் தேவை என மதிப்பிட்டுள்ளது. அமெரிக்கா மட்டும் ஆயுதத் தளவாடங்களுக்காகச் செலவிடும் தொகையில் மூன்றில் ஒரு பங்கை செலவிட்டால் வறுமையில் இருந்து உலக மக்களை மீட்டுவிட முடியும்.



... பக்கம் 6

### முன்னேற்றாத மூன்றாவது மொழி இந்தி வேண்டாம்

மே.து.ரா.

எந்த மொழியாக இருந்தாலும், அந்த மொழியைக் கற்பது நல்லது என்று கூறுவதோ, பயன்படும் என்று நம்ப வைக்க முனைவதோ எந்த அளவுக்கு ஏற்புடையது என்பதைத் தெளிவுபடுத்தியாக வேண்டும். அப்படிக் கூறுவதற்கு சில அடிப்படைகளும் இருந்தாக வேண்டும்.

... பக்கம் 8




# மாமன்னர் ஆட்சியில் தண்டனைக்கு மேல் தண்டனையா?

போர்க்குணமிக்க தோழர்களே!

**தலைநகர் டெல்லி பட்டினத்தில் ஆட்சி, அதிகார பீடத்தில் அமர்ந்துள்ள மோடியின் தலைமையிலான ஆட்சி, ஜனநாயகம் எனும் மிக உயர்ந்த கொள்கையைக் கைவிட்டு, மன்னரின் ஆட்சி முறையினை, அதுவும் மாமன்னர் ஆட்சி முறையைப் பின்பற்றி வருகின்றது.**

அனைவரையும் அரவணைத்தும், பிறர் கருத்துகளுக்கு மதிப்பளித்தும், பல கட்சிகளையும் அங்கீகரித்து போற்றிப் பாதுகாக்கும் மிக உயர்வான ஜனநாயகப் பண்புகள் அனைத்தும் சீரழிக்கப்பட்டு, நான் வைத்ததே சட்டம், ஏற்கிறாயா? இல்லையா? என இறுமாப்புடன் ஆணையிடும் ஆணவம் பிடித்த ஒன்றிய அரசாகச் செயல்பட்டு வருவதும், அது தொடர்ந்து நீடிப்பதும் நாட்டிற்குப் பேராபத்து என்பதை நாட்டு மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டனர்.

இந்தியா என்கிற பெரும்நாடு உத்தரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான், ஆந்திரா என்பது மட்டுமல்ல, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, காஷ்மீர் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களும் உள்ளடக்கியதுதான் இந்தியா என்பது மோடிக்குத் தெரியாத ஒன்றல்ல,

ஒன்றிய அரசு அல்லது அதற்கு தலைமை தாங்கும் பிரதமரோ நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும், அம்மாநிலங்களில் வாழும் இந்தியக் குடிமக்கள் 140 கோடி மக்களுக்கும் கடமைப்பட்டவர்கள்.

ஒன்றிய அரசானாலும், மாநில அரசுகள் ஆனாலும் அவை அனைத்தையும் வழிநடத்திச் செல்வது நமது அரசியலமைப்புச் சட்டமாகும்.

அரசமைப்புச் சட்டத்தை எந்த ஒரு நபரும் அல்லது அரசும் மீறுவது இயலாது, கூடாது. அவ்வாறு மீறிச் செயல்படுவார்கள் தண்டனைக்குரியவர்கள்.

ஒரு இந்தியக் குடிமகன் அரசியலமைப்புச் சட்டத்தை மீறினால், அவன் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவான்.

ஆனால் சட்டத்தை அமல்படுத்திட வேண்டியவர்கள் மீறினால் அவர்களை யார் தண்டிப்பது?

நடுவண் அரசு என்று போற்றப்படும் ஒன்றிய அரசு நடுநிலை தவறாது செயல்பட வேண்டும்.

அவ்வாறு செயல்படாமல் சார்பு நிலை எடுத்துச் செய்யப்படும் ஒன்றிய அரசை, அதற்கு தலைமை தாங்கும் பிரதமரைக் கேள்வி கேட்பவர்கள் யார்?

மாற்றுக் கருத்துடையோரை அனுமதிக்க மாட்டேன் என்று கூறுவது ஜனநாயகம் அல்ல! மாறாக, அது ஒரு சர்வாதிகாரம், அது ஓர் பாசிசம்!

சர்வாதிகாரம், பாசிசம் தற்காலிக வெற்றிகளைப் பெறலாம், பெற முடியும். ஆனால், அதுவே நிரந்தரமல்ல, அவை வீழ்த்தப்படும். முறியடிக்கப்படும் என்பது உறுதியானது. ஜனநாயகம் இறுதியில் வெற்றி பெறும் அதுவே நிரந்தரமானது, மெய்யானது.

இந்த உண்மை இங்கு மட்டுமல்ல, உலகிற்கே பொதுவானது. இரண்டாம் உலகப் போரின் உலகளாவிய பாசிசத்தை உலகம் கண்டுள்ளது.

தன்னை மிஞ்சுபவர் யாருமில்லை, தன்னைவிட உலகில் அறிவாளிகள் இல்லை, உலகம் தன் ஆளுகைக்கு உட்பட்டது என்று கொக்கரித்து, இரண்டாம் உலகப் பெரும் போருக்குக் காரணமான ஹிட்லரின் மரணம் வீர மரணம் அல்ல, கோழைத்தனமான தற்கொலை.

தன் நாட்டிற்கு மட்டுமல்ல, இப்பேருலகின் ஜனநாயகத்தைக் காக்க, சோவியத் செஞ் சேனையின் மாவீரர்கள் 2 கோடி பலியாகி, ஹிட்லரின் பாசிசத்தைத் தோற்கடித்து, வேரடி, வேரடி மண்ணோடு புதைகுழிக்கு அனுப்பி, உலகின் ஜனநாயகத்தைக் காத்திட்ட பெருமைக்குரியவர்கள் கம்யூனிஸ்டுகள் என்கின்ற பேருண்மை மோடியின் வகையறா கூட்டத்திற்கு புரிய வைக்க வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் இந்திய நாட்டுக் குடிமக்கள் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்!

இன்று ஒன்றியத்தில் உள்ள பாசிச அரசு, தமிழ்நாட்டைக் குறிவைத்துத் தாக்கிக் கொண்டுள்ளது.

அத்தாக்குதல் என்பது துப்பாக்கித் தோட்டாக்களைக் கொண்டுள்ள, பீரங்கித் தாக்குதல்களால் அல்ல, ராக்கெட் வீச்சால் அல்ல, மாறாக ஜனநாயகம் என்கிற பெயராலேய அத்தாக்குதல் தொடுக்கப்படுகின்றது.



ஆட்சி தனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைக் கொண்டு, தனது தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் அமைப்பின் ஆணைகளை ஏற்றுப் பிசிறின்றி நிறைவேற்றி வருகிறது.

நாட்டின் குடியரசு துணைத் தலைவர் அண்மையில் கூறிய கருத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். “ஒரு நாட்டைக் கபளீகரம் செய்யப் போர் தொடுக்க வேண்டியது இல்லை. மாறாக, அம்மக்களின் கலாச்சாரத்தை, தாய்மொழியை அழிப்பதன் மூலம் நாட்டைக் கபளீகரம் செய்து விட முடியும் என்று தெரிவித்திருந்தார்.

நாட்டின் குடியரசு துணைத் தலைவர் பச்சை ஆர்எஸ்எஸ் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

அவர் கூறியது போன்றுதான் இன்று ஒன்றிய பாஜக அரசு, தமிழ்நாட்டைச் சீரழிக்க மொழிப் படையெடுப்பை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் பிப்ரவரி 21 ஆம் நாளை, உலக தாய்மொழி தினமாகப் பின்பற்றி வருகிறது. உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் உள்ள மக்கள், தங்களின் தாய் மொழியை போற்றிக் கொண்டாடி மகிழ்கின்றனர். இதன் பொருள் என்ன? ஐக்கிய நாடு சபை உலக மொழி தினம் எனக் கொண்டாட அறைகூவல் விடுக்கவில்லை. மாறாக, உலகத் தாய்மொழி தினம் எனக் குறிப்பிடுகின்றது.

அவரவர் தாய்மொழி காக்கப்பட வேண்டும். அது அழிவை நோக்கிச் சென்றுவிடக் கூடாது. தாய் மொழிக்குப் பிறமொழிகளால் ஆபத்து நேரிடலாம், அத்தகைய ஆபத்துகளில் இருந்து தாய் மொழியைக் காத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை, தேவையை உணர்த்துவதுதான் உலக தாய்மொழி தினமாகும்.

உலக தாய்மொழி தினத்தை நாம் கொண்டாடி மகிழும் நேரத்தில்தான் நம் தாய்மொழி தமிழ் மீது “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று பன்மொழி கற்றுத் தேர்ந்த பாகவி பாரதி போற்றி, புகழ்ந்த நம் இனிய தாய் மொழியாம் தமிழ் மீது, ஒன்றிய அரசு போர் தொடுத்துள்ளது.

இப்போர் இன்று நேற்றல்ல, நூற்றாண்டு காலமாக நடைபெற்று வரும் பெரும் போராட்டம்.

ஒவ்வொரு போரின் போதும், தமிழுக்கு எதிராகப் போர் தொடுத்தவர்களை, தமிழ் மக்கள் ஒரு முகமாய் நின்று தோற்கடித்தார்கள்.

ஆனால் இன்று போர் தொடுப்பவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி, மோடியின் வஞ்சகம் நிறைந்திட்ட பெரும் சூழ்ச்சிக்கு இறையாகிவிட்ட புல்லுருவிகள், தமிழகத்தில், தமிழன் என்று வெட்கமின்றி, கூச்சநாச்சமின்றிப் புலம்பித் திரியும் கூட்டத்தினையும், நாம் எதிர் கொள்ள வேண்டிய தருணத்தில் நாம் உள்ளோம் என்பது வேதனைக்குரியது.

தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாகப் பின்பற்றி வரும் கல்விக் கொள்கைக்கு மாறாக, தனது தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் அமைப்பின் உத்தரவுகளை ஏற்று, மும்மொழிக் கொள்கையை உள்ளடக்கிய தேசியக் கல்விக் கொள்கை எனும், படுபிற்போக்குத்தன ஓர் முடிவை மேற்கொண்டு, அம்முடிவை நீ ஏற்க வேண்டும். அவ்வாறு ஏற்கவில்லை எனில், உனக்கு நிதி கொடுக்க மாட்டோம் என்று ஆணவச் செருக்கோடு கூறுகின்றார் ஒன்றிய கல்வி அமைச்சர் திருவாளர் தர்மேந்திர பிரதான்.

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்று, தமிழ்நாடு அரசு கையெழுத்து இடவில்லை எனில், நிதி வழங்கச் சட்டத்தில் இடமில்லை என்று இல்லாத சட்டத்தை இருப்பதாகக் கூறுகின்றார்.

மூன்றாம் மொழியாக ஏதாவது ஒன்றை நீ ஏற்றுத்தான் தீர வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதன் உள்நோக்கம் என்ன?

இந்தி பேசக்கூடிய மாநிலங்களில் மூன்றாம் மொழியாக எம்மொழி பின்பற்றப்பட்டு வருகிறது என்பதனை ஆதாரத்துடன் பகிரங்கமாக அறிவிப்பாரா ஒன்றிய கல்வி அமைச்சர்?

ஆடு நனைகிறது என ஓநாய் வருத்தப்பட்டதாக கதை ஒன்று உண்டு. தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி மேம்பட, கல்வியின் தரம் உயர்த்தப்படத்தான் தேசியக் கல்விக் கொள்கையாம்.

கேழ்வரகில் நெய் வடிகின்றது என்கிறார் கல்வி அமைச்சர்.

கல்வி அமைச்சரே, தர்மேந்திர பிரதானே, தலைமை தாங்கும் மோடியே, அதன் அடிவருடிகளே, எங்களின் பெற்றோர்கள் நாங்கள் சின்னஞ் சிறுவனாக இருந்தபோதே, எங்கள் காதுகள் ஒன்றில் அல்ல, இரண்டிலும் காது குத்தி விட்டார்கள். நீங்கள் மீண்டும் காதுகுத்த முயல வேண்டாம்.

ஒரே நாடு, ஒரே மொழி என்கிற பித்தலாட்டத்தனமான கொள்கையை அமல்படுத்தும், உங்களின் மிகக் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியே, உங்களின் கேடுகெட்ட கல்விக் கொள்கையாகும்.

அத்தகைய கொள்கைக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை. அதனால், எத்தகைய விளைவுகள் ஏற்படினும் அதனை நெஞ்சு நிமிர்த்தி ஏற்கத் தயார்.

கல்வியில் மட்டுமல்ல, இயற்கைச் சீற்றத்தால் பெரும் பாதிப்பிற்கு, சென்ற 2024ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 37,000 கோடி கோரியது. மோடி அரசு ஒன்றரை பைசா கூட வழங்கவில்லை.

கடந்த 20 ஆண்டு காலமாகப் பின்பற்றி வரும்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்



த.லெனின்

# அடாவடியாகப் பேசும் ட்ரம்ப் அமைதி காக்கும் 56 அங்குலம்

**கிறுக்கன் கிழித்த துணி கோவணத்துக்கு உதவும் என்று சொல்வார்கள். அதைப் போல அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், சமீபத்தில் அறிவித்த சர்வதேச நிதி உதவிகள் நிறுத்தம் என்பதும் நமக்குப் புரியும் வண்ணம் பல செய்திகளை தந்துள்ளது.**

அமெரிக்காவில், மியாமியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பேசிய டிரம்ப், இந்தியாவில் வாக்காளர் எண்ணிக்கையை உயர்த்துவதுக்காக 21 மில்லியன் டாலர்களை நாம் எதற்காகச் செலவிட வேண்டும்?

அடுத்த நாள் அவர் மற்றொரு நிகழ்வில் இந்தக் குற்றச்சாட்டை மீண்டும் கூறினார். 21 மில்லியன் டாலர்கள் எனது நண்பர் பிரதமர் மோடிக்கு இந்தியாவில் வாக்காளர் எண்ணிக்கையை உயர்த்துவதற்காகச் செல்கிறது என்று பேசினார்.

அதன் பிறகு நடந்த கன்சர்வேடிவ் அரசியல் நடவடிக்கை மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்த முறை "இந்தியாவின் தேர்தல்களுக்கு உதவியதற்காக 18 மில்லியன் டாலர்கள்" என்று கூறி, அதை ஒரு வணிக ஊழல் (கிக்பேக்) திட்டம் என்று கூறி அதை மீண்டும் எழுப்பினார்.

இதனை தொடர்ந்து, எலோன் மஸ்க்கின் (Dodge) அரசாங்கத் திறன் துறை இந்தியாவில் ஓர் அரசியல் தீமையைப் பற்ற வைத்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனம் (USAID) நிதியுதவி தொடர்பான சர்ச்சைக்கு மத்தியில், நிதி அமைச்சக அறிக்கை ஒன்று, 2023–24 நிதியாண்டில் நாடு 750 மில்லியன் டாலர்கள் (சுமார் ரூ.6,501 கோடி) பொருளாதார உதவியைப் பெற்றதாகக் கூறியுள்ளது.

### இந்தியா எப்போது இந்நிதியைப் பெறத் தொடங்கியது?

பல ஆண்டுகளாக சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிதி உதவி நிறுவனம் இந்தியாவிற்கு நிதியுதவி அளித்து வருகிறது.

இந்தியாவிற்கான அமெரிக்க இருதரப்பு உதவி 1951 இல் தொடங்கியது. அதன் தொடக்கத்திலிருந்து, அமெரிக்க நிறுவனம் பல்வேறு துறைகளில் 555 க்கும் மேற்பட்ட இந்தியத் திட்டங்களுக்கு 17 பில்லியன் டாலர்கள். சுமார்.ரூ.1.5 லட்சம் கோடி நிதியை வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?' என்பதைப் போல சின்ன மீனைப் போட்டு பெரிய மீனை விழுங்கத் துடிக்கும் ஏகாதிபத்தியச் சுரண்டல் கொள்கைதான் அமெரிக்கா இப்படிப்பட்ட உதவிகளைச் செய்வதாகும். ஆனால், அதன்மூலம் பல லட்சம் கோடி ரூபாய்களை இந்தியாவில் இருந்து அது சுருட்டி உள்ளது. எ.கா. பி.எல்.48 கோதுமை ஒப்பந்தம் மூலம் அமெரிக்கா விதித்த நிபந்தனைகளை கூறலாம்.

### கடந்த நான்காண்டுகளில் அளிக்கப்பட்ட நிதி


அமெரிக்க நிதி உதவி மூலம் இந்தியாவிற்கு வழங்கிய நிதியில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் அதிகமானவை கடந்த நான்கு ஆண்டுகளில் வந்ததாகும் என்று இந்தியப் பொருளாதாரம், உலகச் சந்தை, போன்றவற்றைப் பற்றிய தகவல்களை வழங்கும் பணக் கட்டுப்பாட்டுத் தளம் (மணி கன்ட்ரோல்) கூறியுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் அமெரிக்க நிறுவனத்திடமிருந்து இந்தியா 650 மில்லியன் டாலர்களை சுமார் ரூ.5,634 கோடி பெற்றது. இதன்மூலம், 2001 முதல் இந்தியாவிற்கான மொத்த ஒதுக்கீடு $2.86 பில்லியனை அதாவது ரூ.24,789 கோடியைத் தொட்டது.

### நிதி அமைச்சகத்தின் விளக்கம்

இந்திய நிதி அமைச்சகத்தின் அறிக்கையின்படி, இந்த ஆண்டு நிதி தேர்தலில் வாக்காளர் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக அல்ல, மாறாக விவசாயம் உள்ளிட்ட பிற திட்டங்கள் தொடர்பான 7 திட்டங்களுக்காக வழங்கப்பட்டது. தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க நிதிகள் இந்தியாவில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்தும் நாங்கள் ஆராய்வோம் என்றும் கூறியுள்ளது.

இருப்பினும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை, இந்தியாவில் அத்தகைய நிதி ஒருபோதும் விநியோகிக்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்துள்ளது. மேலும் யு.எஸ்.எய்டு ஊழியர்களும் அத்தகைய திட்டம் இருப்பதை மறுத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




### பாஜகவின் பல்லவி!

டிரம்பின் பேச்சு இந்தியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மோடியின் ஆளும் பாரதிய ஜனதா கட்சி, சர்வதேச சிவில் சமூகமும், மனித உரிமைக் குழுக்களும் அதைக் குறைமதிப்பிற்கு உட்படுத்த முயற்சிப்பதாக நீண்ட காலமாகக் குற்றம்சாட்டி வருகிறது. இதனால் ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் முதல் கிரீன்பீஸ் வரை உலகின் மிகவும் மதிக்கப்படும் பல அமைப்புகள் இந்தியாவில் தங்கள் செயல்பாடுகளை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச அமைப்புகள் பாஜக அரசுக்கு எதிராகச் செயல்படவும், நாட்டின் விவகாரங்களில் தலையிடவும் முயற்சி செய்கிறார்கள் என்பதற்கு டிரம்பின் குற்றச்சாட்டுகள் சான்றாக இருப்பதாக பல பாஜக தலைவர்களும் அமைச்சர்களும் தெரிவித்து வருகின்றனர். பாஜக ஐ.டி பிரிவின் தலைவர் அமித் மாளவியா, "இந்தியத் தேர்தலில் செல்வாக்கு செலுத்தி பிரதமர் மோடியைத் தவிர வேறு ஒருவரை பதவியில் அமர்த்தும் முயற்சி உண்மையில் நடந்திருப்பதை டிரம்ப் உறுதிப்படுத்தியுள்ளார்" என்று கூறினார்.

இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் ஜன்தீப் தன்கர், இந்த நாட்டின் ஜனநாயகச் செயல்முறை நமது தேர்தல் முறையின் தூய்மையைக் கெடுக்கக் கையாளப்பட முயற்சிக்கப்பட்டது குறித்து தான் அதிர்ச்சியடைந்ததாகக் கூறி எரியும் தீயில் எண்ணெய் வார்த்துள்ளார். அதே நேரத்தில் மோடியின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் உறுப்பினரான சஞ்சீவ் சன்யால், இந்த அமெரிக்க நிதி உதவியை "மனித வரலாற்றில் மிகப்பெரிய மோசடி" என்று குறிப்பிட்டுள்ளார்.

### காங்கிரஸின் எதிர்வினை

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, காங்கிரஸ் கட்சி, டிரம்ப் மற்றும் மஸ்க் இந்தியாவை அவமதித்தபோது பாஜக அமைதி காத்து வருகிறது, "அமெரிக்காவிலிருந்து போலிச் செய்திகளை" பரப்புவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

"எலான் மஸ்க் ஒரு போலிக் கூற்றைப் பரப்புகிறார். டிரம்ப் டாக்காவிற்கும் டெல்லிக்கும் இடையில் வித்தியாசம் தெரியாது குழப்பமடைந்துள்ளார்," என்று காங்கிரஸ் கட்சியின் ஜெய்ராம் ரமேஷ் கூறியதுடன். "பாஜக இதற்குப் பதிலளிக்க வேண்டும் இந்தியாவின் ஜனநாயகம் குறித்து பாஜக ஏன் போலிச் செய்திகளைப் பரப்பியது? என்று வினா தொடுத்துள்ளார்.

### உலகளாவிய அளவில் செயல்படும் சங்பரிவார் அமைப்புகள்!

கடந்த காலங்களில் சி.ஐ.ஏ. மூலம் நிதியுதவி அளித்து, இந்திய மதவெறி அமைப்புகளை கம்யூனிச அபாயத்தை தடுக்க வளர்த்தன.

ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தின் (RSS) இரண்டாவது 'சர்சங்க்சாலக்' ஆன எம்.எஸ்.கோல்வால்கர், உலகெங்கிலும் உள்ள இந்துக்கள், அவர்களின் குடியுரிமையைப் பொருட்படுத்தாமல், ஒன்றுபட வேண்டும் என்று வாதிட்டவர்.

### ரகிப் ஹமீத் நாயக்திவ்யா திரிவேதி

'ஹவுடி மோடி' நிகழ்வுக்கு முன்பு, செப்டம்பர் 21, 2019 அன்று டெக்சாஸின் ஹூஸ்டனில் இந்தியச் சமூகத்தைச் சேர்ந்த சிலருடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இந்தியாவிற்கு வெளியே சங் பரிவார் செயல்பாட்டை 1947 ஆம் ஆண்டு வாக்கில் கென்யாவில் தொடங்கினர். 1990 களில் இந்த நெட்வொர்க்கின் வளர்ச்சி அதிகரித்தது.

1970 இல் விஸ்வ இந்து பரிஷத் ஆஃப் அமெரிக்கா (VHPA), அல்லது உலக இந்து கவுன்சில் ஆஃப் அமெரிக்கா உருவாக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டு முதல், அமெரிக்காவில் 150 ஆர்.எஸ்.எஸ் ஷாகாக்கள் இருந்தன. கூடுதலாக வி.எச்.பி.ஏவின் 40 பிரிவுகளும் இந்து மாணவர் கவுன்சிலின் 44 பிரிவுகளும் இருந்தன.

இது அமெரிக்காவில் உள்ள இந்துக்கள் தொடர்பான பிரச்சினைகளுடன் மட்டும் நின்றுவிடாமல், இந்திய அரசியலில் தீவிரமாகப் பங்கேற்றது. ஒரு வெளிநாட்டவர் தனது தாய்நாட்டின் அரசியலில் ஏன் தீவிரமாகப் பங்கேற்பார் என்பதைப் புரிந்துகொள்ள, அரசியல் அறிஞர் பெனடிக்ட் ஆண்டர்சன் கூறிய "நீண்ட தூர தேசியவாதம்" என்ற பதம் நமக்குப் புரிந்து கொள்ள உதவும்.

புலம்பெயர்வின் குற்ற உணர்வும், வெளிநாட்டவர் மீதான பதற்றமும் சேர்ந்து, ஒரு புலம்பெயர்ந்தவரை "அவர் அதன் நீதி அமைப்புக்குப் பதிலளிக்க வேண்டியவர் அல்ல" என்று அந்த நாட்டில் அரசியல் செய்யத் தள்ளுகிறது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதைப் பற்றித் தனது புத்தகமான "The Spectre of Comparisoners: Nationalism, South East Asia and the World" இல் பிரதிபலிக்கும் ஆண்டர்சன், நீண்ட தூர தேசியவாதம் "எதிர்காலத்தின் அச்சுறுத்தும் அறிகுறி" என்று எச்சரித்துள்ளார்.

### கோவிட் நிதியிலும் மானியம் பெற்ற சங்பரிவார் அமைப்புகள்

அல் ஜசீராவில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரை, அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஐந்து இந்துத்துவ குழுக்கள் அமெரிக்கச் சிறு வணிக நிர்வாகத்தால் விநியோகிக்கப்பட்ட கூட்டாட்சி கோவிட் நிவாரண நிதியிலிருந்து குறைந்தது $833,000 கடன் உள்ளிட்ட மானியங்களைப் பெற்றதாக வெளியிட்டுள்ளது.

சேவா இன்டர்நேஷனல் ஆர்.எஸ்.எஸ்சின் சேவா பாரதியின் வெளிநாட்டு சேவைப் பிரிவு, வி.எச்.பி.ஏ.வில் வித்யாலயா அறக்கட்டளை (வி.எச்.பி நடத்தும் திட்டம்), இந்துத்துவ எழுத்தாளர் ராஜீவ் மல்ஹோத்ரா தலைமையிலான இன்ஃபினிட்டி அறக்கட்டளை மற்றும் வாஷிங்டன் டி.சி.யைத் தளமாகக் கொண்ட குழுவான இந்து அமெரிக்க அறக்கட்டளை (எச்.ஏ.எஃப்) ஆகிய ஐந்து அமைப்புகள் சங்க பரிவாரத்துடன் தொடர்பு கொண்டவைகளாகும்.

ஆக மதவெறி கலவரங்களுக்கும், அரசியல் நிலவரங்களைத் தனக்கு ஏற்ற முறையில் மாற்றுவதற்கும் வெளிநாட்டு நிதி அதுவும் கிறிஸ்தவ நாடுகளின் வசூலிக்கப்படும் நிதி, இஸ்லாமிய நாடுகளில் வசூலிக்கப்படும் நிதி பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

மறுபுறத்திலோ தங்களது உற்பத்திக்குக் குறைந்தபட்ச ஆதார விலை கேட்டு போராடும் விவசாயிகள், கல்விக்கு நிதி கேட்டுப் போராடும் மாணவர்கள், எதிர்க்கட்சிகளோ அல்லது முற்போக்கு ஜனநாயக இடதுசாரி கட்சியினர் ஒன்றிய ஆட்சியை எதிர்த்துப் போராடினால் வெளிநாட்டுச் சதி என்று அவர்களால் சபிக்க முடிகிறது. வெளியில் இருந்து அது தூண்டப்படுவதாகச் செய்திகளைப் பரப்பவும் முடிகிறது. பெரும் நிறுவனங்களின் கொள்ளையே கொள்கையாகிப் போன உலக மயம் அதற்கு ஒத்திசைவாக ஆடும் அமெரிக்கா என அனைத்திலும் சுரண்டல் அரசியல் வியாபித்திருக்கிறது. இதனை எதிர்த்து முறியடிக்க நீண்ட கால போராட்டத்திற்குத் தயாராக வேண்டும்.

தொடர்புக்கு : 9444481703

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 48

# என்ன விளையாட்டு இது?

சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்க நெருங்க, தமிழ்நாட்டின் அரசியல் களம் சூடு பிடித்து வருகிறது. இன்றைய தேர்தல்களில், தமிழ்நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் விவாதிக்கப்பட்ட நிலை மாறி, தமிழ்நாட்டின் சமூக, அரசியல்,பொருளாதார, சித்தாந்த பரப்புகளின் மீது பெரும் தாக்குதல் தொடுக்கப்பட்டு வருகிறது.

இந்தியா விடுதலை அடைந்தபோது, தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார, கல்வி நிலை கடைக் கோடியில் கிடந்தது. இன்று கல்வியையும் பொருளாதாரத்தையும் சேர்த்துப் பார்த்தால் தமிழ்நாடு இந்தியாவின் முதல் மாநிலமாகும்.

தமிழ்நாட்டில் நடந்த மத மோதல்கள் மிக மிகக் குறைவு. பெருமளவிலான நகரமயமாக்கம், சாதிய மோதல்களையும் பெருமளவு குறைத்துள்ளது. வேறெந்த மாநிலத்தை விடவும் சமூக அமைதி நன்கு நிலவுகிறது.

இந்தியாவிலேயே அதிக கோவில்கள் உள்ள மாநிலமும் தமிழ்நாடு தான். லட்சக்கணக்கில் மக்கள் கூடும் திருவிழாக்கள் எந்தச் சச்சரவும் இன்றி ஆண்டுதோறும் நடந்து கொண்டிருக்கின்றன. வடபுலத்தாரால் சிந்திக்கவே முடியாத மத நல்லிணக்கம் இங்கு உண்டு.

தேர்தல் லாபத்துக்காக, இந்த சீரிய பண்பாட்டை, சமூக அமைதியை குலைக்கும் வகையில், அரசியல் செயல்பாடுகள் அதிகரிக்கின்றன. ஒன்றிய அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த சீரழிக்கும் செயல்பாட்டை முன்னெடுக்கிறது.

2047ல், கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையை 50 சதமாக இலக்காகக் கொண்டு தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த இலக்கை இப்போதே தமிழ்நாடு தாண்டி விட்டது. அது மட்டுமல்ல, 86 சதவீத பெண்கள் மேல்நிலைக் கல்வி பயிலுகிறார்கள்.

இவற்றையெல்லாம் முடக்கும் வகையில், தமிழ்நாடு அரசு இருமொழிக் கொள்கையை தொடர்கிறது என்ற காரணத்தால், தமிழ்நாட்டுக்கு விடுவிக்க வேண்டிய கல்வி நிதி 2,152 கோடி ரூபாயை தர முடியாது என்று சொன்னதோடு, அந்த பணத்தை குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு மடை மாற்றி உள்ளது பெரும் துரோகம் ஆகும்.

மொழி மட்டுமல்ல, தேசிய கல்விக் கொள்கையின் படி, மூன்று, ஐந்து, எட்டு, பத்து, பன்னிரண்டு வகுப்புகளில், மாணவர்கள் பொதுத்தேர்வை எழுதியாக வேண்டும். தேர்வு என்பதையே பெரும் அச்சத்துக்குரியதாக்கி, பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு மாணவர்கள் நிம்மதி இழந்த பதட்ட நிலைக்கு உட்படுவதை பார்க்கிறோம்.

இத்தனை தேர்வுகளை எழுதி, அதிக மதிப்பெண்களை பெற்றாலும், கல்லூரிக்கு செல்ல மீண்டும் நுழைவுத் தேர்வை எழுதி வெற்றி பெற வேண்டும். அதற்காக தனியார் பயிற்சியகங்களில் லட்சக்கணக்கான ரூபாயை செலவழித்தாக வேண்டும் என்பதெல்லாம் கல்வியை வளர்ப்பதா?

தமிழ் வழியாக கடந்த அறுபது ஆண்டுகளில் கல்வி கற்றோர் எந்த வகையில் சோடை போனார்கள்? உள்நாட்டு அறிவியல் நிறுவனங்கள் மட்டுமல்லாமல், நாசா உள்ளிட்ட வெளிநாட்டு விண்வெளி ஆய்வுகளில் கூட தமிழ்நாட்டு மாணவர்கள் சிறப்பாக செயல்படுவதை ஏன் ஒன்றிய அரசு காண மறுக்கிறது?

அதுமட்டுமின்றி பட்ட வகுப்புகளிலும், ஓராண்டு படித்தால் சான்றிதழ், இரண்டு ஆண்டு படித்தால் டிப்ளமா, மூன்று ஆண்டு படித்தால் பட்டம் வழங்கப்படுமாம்.

இவை அனைத்தும் சேர்ந்து, மாணவர்கள் இடையே படிப்பை விட்டு விலகும் போக்கை ஊக்குவிக்கும். மாணவர்களை வகுப்பறைகளுக்கு ஈர்க்க, சிங்காரவேலர் காமராஜர் காலத்தில் இருந்து எடுக்கப்பட்ட பெருமுயற்சிகளை முடமாக்கும் உள்நோக்கம் இந்த திட்டத்தில் உள்ளது.

அதைப்போலவே, தமிழ்நாடு அரசு உருவாக்கி வைத்திருக்கிற மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளில், தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இடம் குறைக்கப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை, ஒன்றிய அரசின் முகவராக இருக்கிற ஆளுநர் தன் விருப்பத்திற்கு ஏற்ப நியமிக்கிறார். பிற்போக்கும், அறிவியலுக்கு பொருந்தாத மூடத்தனங்களும் நிறைந்தவர்கள் பெரும் கல்வி நிறுவனங்களுக்கு பொறுப்பேற்க வைக்கப்படுவது திகிலூட்டுகிறது.

பறை இசையும், கரகாட்டமும், நாடகங்களுமாக நிறைந்திருந்த கிராம, நகர்ப்புற அம்மன் கோவில் விழாக்கள், இன்று விளக்கு பூஜை, வடமொழி மந்திரம் என மாற்றப்பட்டு உள்ளது.

தெய்வங்களுக்கு ஆடு கோழி பலி கொடுத்து, பல நூற்றாண்டுகளாக புலால் உண்பவர்களையே, புலால் உண்பது ஒழுக்கமற்ற செயல் என்று பேச வைத்திருக்கிறார்கள். திட்டமிட்டு தமிழ்நாட்டு பண்பாடு சிதைக்கப்படுகிறது.

ஏன் இந்தி கற்க வேண்டும் என்று சிறு பிள்ளைத்தனமான அற்பக் காரணங்களை சிலர் கூறுவதும் ஊடக வெளிச்சம் பெறுவதும் கவலையளிக்கிறது.

இவற்றுக்கு எதிரான போராட்டத்தை, எல்கேஜி பிள்ளைகளின் சண்டை என்று, எதிர்கால முதல்வர் கனவுகளில் திளைப்பவர்கள் வர்ணிப்பது, ஆர்எஸ்எஸ்ஸின் குரல் அடுத்தவர்கள் தொண்டைகளிலும் திணிக்கப்பட்டு இருப்பதற்கு சிறந்த சான்றாகும்.

தமிழ்நாட்டின் விழுமியங்களை பாதுகாக்க, மக்கள் விழிப்போடு இருக்க வேண்டும்.

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மற்றும் தனித்துவ நிலப்பதிவு அடையாள எண் (ULPIN) ஒன்றிய அரசு கொடுக்க உள்ளது. இனி அரசுகள் கொடுக்கும் மானியம், கடன், சலுகை உட்பட அனைத்துத் திட்டங்களும் இந்த அடையாள அட்டை உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்குவதற்காக கிராமங்களில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. ஆனால், பத்திரப்பதிவு செய்துள்ள நில உரிமையாளர்கள் மட்டும் பதிவு செய்யப்படுவதால், தமிழகத்தில் 65 விழுக்காடு உள்ள குத்தகை விவசாயிகள், ஒப்பந்த சாகுபடியாளர்கள், நிலக் கிரயம் செய்தும் பத்திரம் மாற்றிக் கொள்ளாத விவசாயிகளிடம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றிய அரசின் விவசாயிகள் நல நிதியை அனைத்து விவசாயிகளுக்கும் ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் வேளாண் ஊக்க மானியமாக உயர்த்தி வழங்கிடு

பிரதான் மந்திரி கிஸான் சம்மான் யோஜனா 2019 ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. சொந்தமாக நிலம் இருந்தும் வேறு வருமானம் இல்லாதவர்களின் குடும்பங்களில் ஒருவருக்கு வழங்கப்பட்டு வருகிறது. தொடங்கிய காலத்தில் தமிழ்நாட்டில் 48 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றனர். இதில் நில உரிமை பிரச்சனையில் 5 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர். தகுதியின்மை என்று கூறி 6 லட்சம் பேர் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 37 லட்சம் விவசாயிகளில், 9 லட்சம் பேர் ஆதார் கார்டு பதிவு செய்யாதவர்கள். இவர்களுக்கு கடந்த மாதம் வரை மானியம் கிடைக்கவில்லை.

எனவே இந்த திட்டத்தை பயனுறும் நிலையில் மாற்றிட, சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்குமான உதவித் திட்டமாக வழங்கிட வேண்டும். மேலும் இரண்டாயிரம் ரூபாய் வீதம் மூன்று தவணைகளாக ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதனை வேளாண் ஊக்க மானியமாக ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாயாக ஒன்றிய அரசு உயர்த்தி வழங்கிட வேண்டும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் மார்ச் 7 ஆம் தேதி முழக்கப் போராட்டம் நடத்திட வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.










மு.வீரபாண்டியன்

# மொழிக் கொள்கையும் கம்யூனிஸ்டுகளும்







**இந்தியாவில் இரு மொழியா? மும்மொழியா? என மொழிக் கொள்கை குறித்த உரையாடல்கள் மீண்டும் எழுந்துள்ளது. தமிழகத்தில் இத்தகைய உரையாடல்கள் கூடுதல் முக்கியத்துவம் பெற்றுள்ளன.**

தமிழ்நாடு ஏறத்தாழ 90 ஆண்டுகளுக்கு மேல் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடி வருகிறது. இரு மொழிக் கொள்கையைப் பேணுகிறது. பிற மொழிகளை தமிழ்நாடு எதிர்ப்பதில்லை. ஒன்றிய அரசின் மொழித் திணிப்பைத்தான் எதிர்க்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே மொழிக் கொள்கை குறித்து விவாதங்கள் துவங்கிவிட்டன. 1937 இல் பிரிட்டிஷ் இந்தியாவில் ராஜாஜியின் ஆட்சி இந்தியைத் திணித்தது. நீதி கட்சியும், தந்தை பெரியாரும் இதனை பகிரங்கமாக எதிர்த்துப் போராடினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்ட காலம் அது. தோழர் ஜீவா உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் பலர் அடக்குமுறைகளுக்கும், தேடுதலுக்கும் உள்ளாகியிருந்த காலச் சூழல் அது.

தலைமறைவு காலத்திலேயே உலக இலக்கியங்களையும், மொழி வரலாறுகள் குறித்தும் மிக ஆழமான பார்வை கொண்ட பல்வேறு அறிஞர் குழாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்தது. அனைவரும் புனைப்பெயர்களில், தலைமறைவு என வாழ வேண்டிய அடக்குமுறைக் காலம் அது.

விடுதலைக்குப் பின், 1960களில் மீண்டும் இந்திய நாடாளுமன்றத்தில் மொழிக் கொள்கைகள் குறித்த உரையாடல்கள் தொடங்கின.

இந்தித் திணிப்பிற்கு எதிராக, 1961 இல் தமிழ்நாடு போர்க் கோலம் பூண்டது. இதற்காகப் போராட்டங்களும், உயிர்பலியும் கொடுக்கப்பட்டது. திமுக இப்போராட்டத்தில் முன்னணியில் இருந்தது.

பின்னர் நேரு, இருமொழி குறித்த கொள்கையை அறிவித்தார்! இந்தி பேசாத மக்கள் மீது, மாநிலங்கள் மீது இந்தித் திணிப்பு இருக்காது, அதுவரை இணைப்பு மொழியாக ஆங்கிலம் தொடரும் என உறுதியளித்தார்.

ஆனாலும் அன்றிலிருந்து இன்று வரை பல்வேறு வடிவங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்தி திணிக்கப்படுகிறது.

தாய்மொழி தமிழ், ஆங்கிலம் தொடர்பு மொழி, ஆங்கிலம் கொண்டு இந்தியாவிலும் தொடர்பு கொள்ளலாம். உலகிலும் தொடர்பு கொள்ளலாம்.

ஆங்கிலம் ஓர் மொழி. அது தொடர்புக்கும், அறிவியல் மற்றும் வர்த்தகத்திற்கும் பயன்படுகிறது. அதற்காக, அது அறிவு என்றோ, பகுத்தறிவு என்றோ ஏற்க இயலாது. அறிவை வளர்த்துக் கொள்ள அது பயன்படும்.

ஆங்கிலம் பகுத்தறிவு என்றால் ஆங்கிலம் அதிகம் பயின்றோர் அனைவரும் பகுத்தறிவாளர்களா? அல்ல.

பகுத்தறிவு என்பது சமூக அறிவியல் சார்ந்தது, உண்மை சார்ந்தது, மானிடர் சமத்துவம் சார்ந்தது, விடுதலை சார்ந்தது. இதன் அனைத்தையும் மறுத்தவர்கள்தான் ஆங்கிலேயர்கள்.

ஆங்கிலம் மட்டுமே அறிவியல் மொழி ஆகுமா? தாய்மொழியில் ரஷ்யர்கள் சாதிக்கவில்லையா? பிரஞ்சு மொழி பேசுவோரும், சீன மொழி பேசுவோரும் சாதிக்கவில்லையா?

தமிழ்மொழியில், கல்வியும், அறிவியலும் போதிக்கப்படும் போது, தமிழும் உலகில் சாதிக்கும்.

ஒவ்வொரு மொழிக்கும் சிறப்புகள் இருக்கக் கூடும். அதனால், அம்மொழி உயர்ந்தது? பிற மொழி தாழ்ந்தது அல்ல, பிறமொழிகளுக்கு இல்லாத சிறப்பு தமிழுக்கு உண்டு!

தமிழோடு பயணப்பட்ட கிரேக்கம், அப்போது பேசப்பட்ட லத்தின், பாரசீக மொழி, ஏன்? சமஸ்கிருதம் என யாவும் வழக்கில் இன்று இல்லை.

தமிழ் மட்டும் வாழ்கிறது. காரணம்? தமிழ் பிற மொழிகளை மதிக்கும், பிற மொழி ஏற்கும், பிற மொழியோடு உறவாடும், அதன் கதவுகள் அடைபடுவதில்லை.

இத்தகைய நெகிழ்ச்சியும், உறவும் தமிழில் உண்டு. எனவேதான் தமிழ் அழியவில்லை, தமிழ் வாழ்கிறது. செம்மொழியில் செம்மாந்து நிற்கிறது.

தற்போது திடீரென பிரதமர் மொழி ரீதியில் பிரிவினைகள் கூடாது என்கிறார். அவர் தமிழ்நாட்டைக் குறி வைத்துத்தான் இப்படி கூறுகிறாரா?

மொழி ரீதியில் மட்டுமல்ல சாதி, மத ரீதியிலும் பிரிவினை கூடாது என்கிற மாநிலம்தான் தமிழ்நாடு. எதன் பேரிலும் பிரிவினைகள் கூடாது என்பதே நமது நிலை.

இந்தித்திணைப்பை அல்லது மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் நிதி என்கிற ஒன்றிய அரசின் நிலைப்பாடுதான் பிரிவினை, பிரதமர் முதலில் இதனை உணர வேண்டும்!

உலகிலேயே முதன்முதலில் 1848 ல் தான் மொழி குறித்த தொலைநோக்கு வெளிப்பட்டது.

மார்க்ஸ், ஏங்கல்ஸ் பிரகடனப்படுத்திய கம்யூனிஸ்ட் அறிக்கைதான், பல்வேறு மொழிகளில் உலகை மதித்தது.

கம்யூனிஸ்ட் அறிக்கையை மொழி பெயர்ப்பதற்காக ஆங்கிலம், டேனிஷ், ஜெர்மன் எனப் பல்வேறு மொழிகளும், தேசிய இனங்களை அடையாளப்படுத்தும் தோழர்கள் இங்கு கூடி உள்ளனர் எனக் கூறப்பட்டது.

இதன்மூலம் உலகில் பல மொழிகளை மதித்தது கம்யூனிஸ்ட் அறிக்கை. பல மொழி பேசும் தேசிய இனங்களை அங்கீகரித்தது.

ஒன்றை ஒன்று மதிப்பது அவசியம். ஒன்றை மற்றொன்று ஏற்பது விருப்பம்.

இத்தகைய மொழிக் கொள்கை எப்போதும் வாழும்!

# புத்தகத் திருவிழா கோலாகலம்




என்ன பிரச்சனை? வருடாந்திரத் திதி கொடுக்கறது மாதிரி அரசு மாவட்ட நிர்வாகம் புத்தகத் திருவிழா நடத்துவதும், எழுத்தாளர்கள் கூக்குரலிடுவதும் சிலர் முனகுவதும் வழக்கமாகிறது.

என்ன பிரச்சனை? உள்ளூர் எழுத்தாளர்களைக் கூப்பிடாமல் "கத்தும்" பட்டிகளைக் கூப்பிடுவது மட்டுமா? எழுத்தாளர்னு சொல்லிக்கறமாதிரி கொஞ்சப்பேர்தான் இருக்காங்க. பலர் ஏதோ வித்தை பல புரிந்து வளமான அரசு அமைக்கும் குழுவில் பொறுப்பேற்று மந்தகாசம் செய்கிறார்கள். பர்வீன் அக்கா, மோகனசுந்தரம் வகையறாக்கள்தான் டாப் டென். இந்த மூஞ்சிகளுக்கு இலக்கியக் களையே சுத்தமாகக் கிடையாது. அதலானென்ன கூட்டம் வருகிறது. கோடிக்கணக்கில் புத்தகங்கள் விற்கின்றன என்பது நிர்வாகத்தின் கணக்கு?

அரசே தலையிட வேண்டும். 'கனரக' எழுத்தாளர் 'லைட்ரக' எழுத்தாளர் எனரகப்பட்ட வகை இருக்கு. துணுக்கு எழுதும் ஆசாமிகளுக்கும் எழுத்தாளர் அந்தஸ்து கொடுக்கலாம். பட்டிகளுக்கு இந்த அப்பாவிகள் தேவலாம்தான். ஜூனியர், சப்ஜூனியர், கறுப்பு, சேப்பு, குட்டை, நெட்டை என்று வகை பிரிக்கலாம். சாருமாதிரியான ஏகப்பட்ட ஜோக்கர் இருக்கலாம். வம்பே இல்லை. யாருக்கும் புரியாது பேசுவார்கள். அப்புறம் இருக்கவே இருக்கு பாண்டவர் கௌரவ கோஷ்டி எழுத்தாளர் குழாம். இப்போ புது டிரண்ட். ரெண்டு கோஷ்டியிலையும் இருக்கற 'சமத்து'கள். ஒரு கூட்டத்தில் இந்துத்வா, இன்னொரு கூட்டத்திலே முற்போக்கு. படுகெட்டிக்காரத்தனமாகச் செயல்பட்டு பர்மன்டாக மேடையேறும் ஆஸ்தான எழுத்தாளர்களும் உளர்.

அப்புறம் பேராசிரிய எழுத்தாளர்கள். பெரும்பாலும் வெளிநாடுகளில் சுற்றிக்கொண்டிருப்பவர் போக சதா கருத்தரங்கு, பயிலரங்கு எனச் சுற்றிக்கொண்டிருப்பவர்கள் போக சில அப்பாவி பி.எச்.டிக்கள் வகுப்பறைகளில் இருப்பர். அவர்களை அழைக்கலாம். வம்புதும்புக்குப் போகத் தெரியாதவர்கள். அழைக்கலாம். ரெண்டுவார்த்தை ஏதோ பேசுவர்.

இந்த வம்பே வேண்டாம் என்றால் அதற்கும் வழியிருக்கிறது? அரசு அதிகாரிகளைச் சுகாதார இலாகா இயக்குநர், வட்டாட்சியர், வேளாண்மை உதவி இயக்குநர், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், திடக்கழிவு மேலாண்மை இயக்குநர், உணவு பதப்படுத்தும் அதிகாரி, தோட்டக்கலை அலுவலர், வனச்சரகர்கள், வணிகவரி, அறநிலையத்துறை உதவி கமிஷனர்கள், கோயில் குருக்கள்கள், லோக்கல் ஃபண்ட் ஆடிட் ஆசாமிகளை அழைக்கலாம். ஒருவாரப் புத்தாக்கப் பயிற்சி போதும். உரைநடைக்கு நம்ம கோணங்கி, கவிதைக்குப் பரிவட்டத்தோடு காத்திருக்கும் நம்ம மனுஷ், பௌராணிக எதார்த்தத்திற்கு நம்ம விஷ்ணுபுரம், அயல் மொழி இலக்கியத்திற்கு நம்ம சாரு பயிற்றுநராக இருந்து தயாரிக்கலாம். இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு நம் பரம பூஜான்ய பாரதீய கோவில்பட்டி கூகையை அழைக்கலாம். சர்தானே.

ஆடியன்ஸுக்கும் லோல்பட வேண்டாம். அந்தந்த ஆபீஸ் எழுத்தர்கள் மேலாளர்கள் உதவியாளர் ஹெட் கிளார்க்கள், டெஸ்பாட்ச் கிளார்க்குகள் விஏஓக்களை வைத்து நாற்காலிகளை நிரப்பிவிடலாம்.

வம்பும் அடிதடியும் வாதப்பிரதிவாத லாவணியும் இல்லாமல் மாவட்ட நிர்வாகம் புத்தகக் கண்காட்சியை ஒப்பேத்திவிடலாம்.

இந்த யோசனை எடுபடுமா? தெரியலை. அந்தந்த மாவட்ட நிர்வாகம் கவனிக்க வேணும்.

– நா.விச்வநாதன்

# மனித குலத்துக்கு எதிரான போர்கள்

## வெறி பிடித்த வல்லரசுகளுக்கு முடிவு கட்டுவது யார்?




வ.மணிமாறன்

**போர் இந்த உலகத்தையும் மக்களையும் தின்று கொண்டிருக்கிறது. நாடுகளின் பெயரால், தேசத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் போர்களால் மக்கள் படும் இன்னல்கள் சொல்லி மாளாது.**

பாலஸ்தீனர்களின் காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள் என அனைத்தும் இன்று இடிபாடுகளாக காட்சியளிக்கின்றன. குடிநீர் கட்டமைப்புகள் நொறுக்கப்பட்டுவிட்டன. இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி மக்கள் ஓடிக்கொண்டே இருந்தனர். பெற்றோர்களை இழந்து அனாதையான பிள்ளைகள், போருக்கு பிள்ளைகளைத் தின்னக் கொடுத்துவிட்டு கலங்கி நிற்கும் பெற்றோர்கள், உயிருடன் இருப்பது யார்? இறந்தது யார்? என்பதுகூடத் தெரியாத அவலம்.. இப்படிப் போரின் துயரங்கள் எண்ணற்றவை.

உலகம் முழுவதும் போரின் கொடூரங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதால், வல்லரசு நாடுகளும் ஆயுத உற்பத்தி நிறுவனங்களும் இதுவரை இல்லாத அளவுக்கு தங்களின் பைகளை நிரப்பி வருகின்றன. கடந்த ஆண்டு (2024) மட்டும் உலகின் ஏழு பெரிய பணக்கார நாடுகள், தங்களின் ராணுவத் தேவைகளுக்காக 1 லட்சத்து 20 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர்கள் செலவிட்டுள்ளன. இவர்கள் நடத்திய போர்கள் உலகின் மிகப் பெரும்பான்மையான மக்களை படுகுழியில் தள்ளிவிட்டுள்ளன. ஆளும் வர்க்கத்திற்கு கனிம வளங்களையும் செல்வங்களையும் வாரி வழங்கி வருகின்றன.



2024 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இராணுவ பட்ஜெட் மட்டும் 82,430 கோடி டாலர். இந்தப் பணத்தின் ஒரு பகுதியை செலவிட்டால் உலகின் வறுமையைப் போக்கிவிட முடியும்.



உலகின் செல்வ வளம், வறுமை தொடர்பான கணக்கெடுப்புகளை வெளியிட்டுவரும் ஆக்ஸ்ஃபாம் நிறுவனம், மனிதகுலத்தின் பசிப் பிணியை ஒழிப்பதற்கு 3,200 கோடி டாலர் தேவை என மதிப்பிட்டுள்ளது. அமெரிக்கா மட்டும் ஆயுதத் தளவாடங்களுக்காகச் செலவிடும் தொகையில் மூன்றில் ஒரு பங்கை செலவிட்டால் வறுமையில் இருந்து உலக மக்களை மீட்டுவிட முடியும்.

பசித்தவனுக்கு உணவிடுவதைவிட அழுகிப்போன இந்த வல்லரசுகள், போர்களை மூட்டிவிடுவதிலும் போர் புரிவதிலுமே குறியாக இருக்கின்றன. எட்டுப் பெரிய பணக்கார நாடுகளின் ராணுவச் செலவுடன் ஒப்பிட்டால், சிறுதுளியை செலவிட்டாலே மனிதகுலம் வறுமையில் இருந்து மீண்டுவிடும்.

ஆனால், 15 ஆண்டுகளுக்கும் மேலாக உலகப் பசியைத் தீர்ப்பதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என உலக சுகாதார அமைப்பை கவலை தெரிவித்துள்ளது. 2024 ஆம் ஆண்டு ராணுவத்திற்காக அமெரிக்கா செலவிட்டதில் பாதியை மட்டும் செலவிட்டால், அடுத்த ஐந்து ஆண்டுகளில் வறுமைக்கு மனிதகுலம் விடை கொடுத்துவிடும்.

அப்பாவி காசா மக்கள் மீது ஆயிரம் கிலோ எடையுள்ள குண்டுகளை மழையாகப் பொழிந்ததால், பேரழிவு ஏற்பட்டதைத் தவிர எதுவும் நடக்கவில்லை. ஆனால் அந்த நிதியை புவியில் அதிகரித்துவரும் கார்பன் அளவைத் தடுப்பதற்காகச் செலவிட்டிருந்தால், பெட்ரோல், டீசல் உள்ளிட்ட புதைபடிவ எரிபொருள் நுகர்வால் ஏற்பட்டு வரும் பாதிப்புகள் தடுக்கப்பட்டிருக்கும். பெரும் நெருக்கடியில் இருந்து மனித குலம் மீண்டிருக்கும். காற்று மாசு அதிகரித்து வருவதால் அமெரிக்காவில் மட்டும் ஆண்டுக்கு மூன்றரை லட்சம் பேர் உயிரிழந்து வருகின்றனர்.

வேறு வார்த்தைகளில் சொன்னால், ராணுவத்திற்காக அமெரிக்கா செலவிடும் தொகையை மனித குலத்திற்குச் செலவிட்டால், புவியில் கார்பன் அதிகரிக்காமல் தடுத்து விடலாம். உலக வறுமையை ஒழித்து விடலாம்.

நீண்ட தொலைவு இலக்குகளைத் தாக்கும் அதிநவீன ஏவுகணைகளை உக்ரைனுக்கு இங்கிலாந்து வழங்கியுள்ளது. இந்த ஏவுகணை ஒன்றின் விலை 10 லட்சம் டாலர் ஆகும். இப்படி உக்ரைன் போருக்காக 1300 கோடி டாலர் நிதியை இங்கிலாந்து செலவிட்டுள்ளது. இந்தத் தொகை, 24 ஆண்டுகளுக்கு இங்கிலாந்து மக்களின், உணவு, வாடகை, போக்குவரத்து உட்பட சராசரியான மாதாந்திர செலவுகளுக்குப் போதுமானது.

போர் தொடங்கியதில் இருந்து உக்ரைன் நாட்டுக்கு 610 கோடி டாலர் நிதியும், 2024 ஆம் ஆண்டு மட்டும் இஸ்ரேலுக்கு 2300 கோடி டாலர் நிதியும் அமெரிக்கா கொடுத்துள்ளது. வெப்ப மண்டலப் பகுதிகளில் பரவும் பன்றிக் காய்ச்சல், கொரோனா போன்ற தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தவும் பரவாமல் தடுக்கவும் இந்த நிதி போதுமானது என்று உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

இருபது நாடுகளில் 50 விழுக்காட்டுக்கும் குறைவாகவே எழுத்தறிவு பெற்றுள்ளனர். இந்த நாடுகள் முழுமையான கல்வியறிவைப் பெற 1400 கோடி டாலர் செலவிட்டால் போதுமானது என்று யுனஸ்கோ மதிப்பிட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு ஏழு பெரிய நாடுகளின் (ஜி7) ஒரு மாத இராணுவ செலவுத் தொகையை ஆகும்.

உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் வீட்டிலிருந்தே ஆன்லைனில் கல்வி பெறுவதற்கான உள்கட்டமைப்பு. தடையற்ற மின்சாரம், மலிவான விலையில் அதிவேக இணைய இணைப்பு (இன்டர்நெட்) போன்றவற்றைப் பெறுவதற்கு 1 லட்சத்து 40 ஆயிரம் டாலர் செலவழிக்க வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு முதல் 40 நாடுகளின் ராணுவங்களுக்குச் செலவிட்டதில் பாதித் தொகையை செலவிட்டாலே போதுமானதாகும்.

உலகம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு கல்வியும் அதனைப் பெறுவதற்கு உதவக்கூடிய இணைய வசதியும் கிடைத்துவிட்டால், மனித ஆற்றல் எத்தனை மடங்கு மலரும். பல லட்சம் புதிய அறிவியலாளர்கள், மருத்துவர்கள், கலைஞர்கள், பொறியாளர்கள் உருவாவர்கள். மனித குலம் அறிவொளி பெற்று மிளிரும். சமூகம் எதிர்கொண்டிருக்கும் எத்தனை பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான கண்டுபிடிப்புகள் வெளிவரும். ஆனால், போர் வெறி பிடித்த வல்லரசுகள், பல்லாயிரம் டன் குண்டுகளை வீசி பேரழிவில் பயணித்து வருகின்றன.

வறுமை, கல்வியறிவின்மை உள்ளிட்ட பிரச்சனைகளில் இருந்து மனிதகுலம் மீண்டிட, மகத்தான வளர்ச்சியைப் பெற்றிட மனித ஆற்றல் பன்மடங்கு பெருகிட தேவையான வளங்களும் நிதியும் இந்த உலகில் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றைப் பயன்படுத்துவதற்கான விருப்பமோ அக்கறையோ இந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கு கிடையாது. போர் வெறிக் கூச்சல், இராணுவத்துக்கும் ஆயுதங்களுக்கும் அதிகமான செலவிட்டு வீணடிப்பது, ஆட்சியாளர்கள் ஊதாரித்தனமாக செலவிடுவது, வல்லரசுகளுக்கு இடையிலான மோதல்களில் ஈடுபடுவது, போன்றவற்றில்தான் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதனை மக்கள் மட்டுமே முடிவுக்கு கொண்டுவர முடியும். மக்கள் எழுச்சிதான் ஏகாதிபத்திய வாதிகளுக்கும் வல்லரசுகளுக்கும் முடிவு கட்டும். மக்கள் எழுச்சிதான் பேரழிவு ஆயுதங்களையும் காட்டுமிராண்டித்தனமான போர்களையும் முடிவுக்கு கொண்டுவரும்.

தொடர்புக்கு: 9500001224

### பள்ளிகளை மூடிய போர் வெறியர்கள்

இஸ்ரேலின் இனப்படுகொலைப் போரால், காசாவில் வசிக்கும் 45 ஆயிரம் பாலஸ்தீன குழந்தைகள் முதலாம் ஆண்டு பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. ஆறரை லட்சம் குழந்தைகள் ஓராண்டு முழுவதும் பள்ளிக்கூடங்களின் பக்கம் எட்டிக்கூட பார்க்கவில்லை. பள்ளிக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டுள்ளதால் மீண்டும் எப்பொழுது பள்ளிக்குச் செல்வார்கள் என்பதும் தெரியவில்லை. அனைவருக்கும் கல்வியை கொடுப்பதற்குப் பதிலாக, காசாவில் உள்ள அனைத்துப் பள்ளிகளையும் மூடுவதற்கு அமெரிக்க இஸ்ரேல் போர் வெறியர்கள் உத்தரவாதம் அளித்துள்ளனர்.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்புத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு வழங்கிட வேண்டிய நிதி 2,152 கோடி, அந்நிதியை ஒன்றிய அரசு இன்று வரை வழங்க மறுக்கிறது.

இதன் விளைவாக தமிழகத்தின் ஏழை, எளிய மக்கள். அவர்கள் பணியாற்றிய காலத்திற்குரிய ஊதியத்தை, பல மாதங்களாக மாநில அரசால் வழங்க முடியவில்லை. பணிகளைத் தொடரவும் முடியவில்லை. ஏழை, எளிய மக்களின் துன்பத்தை, துயரத்தை, பட்டினியைக் கண்டு மோடி அரசு மனம் மகிழ்கின்றது.

இவைகளுக்கெல்லாம் மேலாக, நாடாளுமன்றத் தொகுதிகள் சீரமைப்பு என்கிற பெயரால், தமிழ்நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளை, 31 தொகுதிகளாகக் குறைப்பதற்கும், வட மாநிலங்களான உ.பி, பிஹார், போன்ற மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கைகளை, தற்போதை காட்டிலும் அதிகரிப்பதற்குமான, அடாவடித்தனத்தை மேற்கொண்டு, தமிழகத்தின் உரிமைகளை முற்றாகப் பறிப்பதற்கான படுபாதகச் செயலை கூச்ச, நாச்சமின்றி மேற்கொள்ள துடியாய், துடிக்கிறது மோடி அரசு.

ஆம்! நாட்டை ஆள்வது ஜனநாயக ஆட்சி அல்ல. மாறாக மன்னராட்சி. மாமன்னர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டுள்ளது.

மாநில ஆட்சிகள் எல்லாம், அதிலும் குறிப்பாக, எதிர்க்கட்சிகள் ஆட்சி புரியும் மாநிலங்கள் எல்லாம், குறுநில மன்னர்கள் ஆட்சியாகக் கருதுகின்றது மோடி ஆட்சி.

நாட்டில் மாமன்னர் ஆட்சிக்கு இடமில்லை. மக்கள் கிளர்ந்து ஒன்றுபட்டு போர் புரிவார்கள்.

மாமன்னர் ஆட்சி முறைக்கு முடிவு கட்டி விடுவார்கள்

ஜனநாயகத்தை காப்பாற்ற களம் புகுவார்கள்.

போர்க்களம் காண, கண நேரமும் தாமதிக்காது. களம் காண ஆயத்தமாவீர்! அணிவகுப்பீர்! மீண்டும் சந்திப்போம்,

வணக்கம்,

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

**சென்ற இதழ் தொடர்ச்சி**

# அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி, வளர்ச்சி மற்றும் வேலையின்மை

தொ ழில்நுட்பம், முன்னேற்றம் மற்றும் வேலை வாய்ப்புப் பிரச்சினைகள் குறித்து, 2025 பிப்ரவரி 79, பாட்னாவில் நடைபெற்ற, அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின், தேசியக் கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட அறிக்கை



## முதலாளித்துவத்தின் கீழ் அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி

பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்தவும் ,சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் அனைத்து நாடுகளும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். ஆனால், முதலாளித்துவ அரசுகள் அவ்வாறு செய்யவில்லை. முதலாளித்துவத்தின் கீழ் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் முக்கிய உந்துசக்தியாக இருப்பது லாப வெறியும், கடுமையான போட்டியுமாகும்.

இலாப நோக்கம், சந்தையில் தங்கள் போட்டியாளர்களை தோற்கடிக்க வேண்டுமென்ற வெறி ஆகியவை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வளர்க்க வேண்டும், உற்பத்தியில் அவற்றின் பயன்பாட்டையும் ஊக்குவிக்க வேண்டுமென முதலாளிகளை கட்டாயப்படுத்துகின்றன.



முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வரம்புகளுக்குள் அறிவியல் மிகப்பெரிய முன்னேற்றங்களுடன் முன்னேற முடியும்.

முதலாளித்துவ விஞ்ஞானிகள் தங்களை சுதந்திரமானவர்களாகவும் தடையற்றவர்களாகவும் நினைக்கின்றனர். மனிதகுலத்திற்காகவோ அல்லது அறிவுக்காகவோ தங்கள் ஆராய்ச்சிகளை நடத்துவதாகவும், அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு சமூகம் அவர்களை கௌரவித்து வெகுமதி அளிக்கவும், சூழ்நிலைகள் அனுமதிக்கும் இடங்களில் அவர்களின் கண்டுபிடிப்புகளை நடைமுறை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் தயாராக இருப்பதாக அவர்கள் எதார்த்த உண்மைகளுக்கு மாறாக நினைக்கிறார்கள்.

இந்த முதலாளித்துவ அறிவியல் சுதந்திரத்தின் உண்மை நிலை என்னவென்றால், அறிவியல் எப்போதும் மூலதனத்திற்காகவே பாடுபட்டு வருகிறது. மூலதனம் தனது லாபத்தை அதிகரிப்பதற்காக அறிவியல் கண்டு பிடிப்புகளை,கோட்பாடுகளை பயன்படுத்துகிறது.

முதலாளித்துவ விஞ்ஞானிகள் தந்திரமானவர்கள் அல்ல. அவர்களையும் அறியாமல் அவர்கள் மூலதனத்திற்கு கட்டுப்பட்டவர்களாகவும், அதற்கு சேவை செய்பவர்களாகவுமே உள்ளனர்.

அறிவியலும் தொழில்நுட்பமும் சுரண்டலுக்கான கருவிகளாக இருக்கும் முதலாளித்துவ சமூகங்களில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் வெளிப்படையான முரண்பாடுகள் உள்ளன.

ஏகாதிபத்தியம் பெரும்பாலும் அறிவியல் மற்றும் பொறியியலை ஒருதலைப்பட்சமாக தனது வளர்ச்சிக்கு பயன்படுத்துகிறது. ஏகபோகங்கள் தங்களுக்கு அதிக லாபத்தை தரும் அறிவியல் துறைகளை வளர்ப்பதில்தான் அக்கறை கொண்டுள்ளன.மிகவும் அதிகமான லாபம் தரும் போர்த்தளவாடங்களை உற்பத்தி செய்தல் அவற்றிற்கான ஆராய்ச்சிகளை முடுக்கிவிடுதல் போன்றவற்றில் தான் பேரார்வம் காட்டுகின்றன.

அறிவியல் தொழில் நுட்பத்தை இராணுவமயமாக்கலுக்கு பயன்படுத்துவது என்பது சமகால முதலாளித்துவ சமூகங்களில் நிலவும் மோசமான, ஆபத்தான போக்காகும். முதலாளித்துவத்தின் அராஜகமும் போட்டியும் அறிவியலில் வணிக ரகசியங்களை உருவாக்குகின்றன. ஏகபோகங்கள் ஆயிரக்கணக்கான முக்கியமான கண்டுபிடிப்புகளை அவற்றின் "வணிக மதிப்பு" உயரும் வரை ரகசியமாக வைத்திருக்கின்றன. இது அறிவியல் வளர்ச்சிக்கும் மக்கள் நலனுக்கும் எதிரானதாகும்.

வளரும் நாடுகளை சுரண்டுவதற்கு வளர்ந்த நாடுகளின் கைகளில் எஸ்.டி.ஆர் ஒரு கருவியாக மாறியுள்ளது.

## சோசலிசத்தின் கீழ் எஸ்.டி.ஆர்.

சோசலிசத்தின் கீழ் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப புரட்சி முற்றிலும் மாறுபட்ட நோக்கங்கள், வாய்ப்புகள் மற்றும் விளைவுகளைக் கொண்டுள்ளது.

சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் நல்வாழ்வையும் முழுமையான வளர்ச்சியையும் உறுதி செய்வதற்காக சோசலிசம் , திட்டமிடப்பட்ட அமைப்பு முறையில் உற்பத்தியை உறுதிப்படுத்துகிறது. அதனால்தான் சோசலிசமும், கம்யூனிசமும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப புரட்சியின் முன்னேற்றத்திற்கு தங்குதடையற்ற வாய்ப்பை வழங்கும்.

அவை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் சாதனைகளை மக்களின்நலன்களுக்காகப்பயன்படுத்தும். மக்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் சோசலிசம் தீங்கு விளைவிக்காது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, சோசலிசத்தின் கீழ் மட்டுமே மனிதர்கள் மற்றும் சமூகத்தின் நலன்களுடன் ஒத்துப்போகும்.

சோசலிச சமூகத்தில் அறிவியல் உற்பத்தியை வளர்ப்பதற்கும் உழைக்கும் மக்களின் பொருளாயாத மற்றும் கலாச்சார தர மட்டத்தை உயர்த்துவதற்கும் ஒரு முக்கிய கருவியாகும்.

தொழில்நுட்ப முன்னேற்றத்திலும் உழைக்கும்மக்களின்உற்பத்தி திறன்களை வளர்ப்பதிலும் இயற்கை அறிவியல் ஒரு தீர்க்கமான பங்கை வகிக்கிறது. மக்களின் கலாச்சார மற்றும் தொழில்நுட்பமட்டத்தை மேம்படுத்துகிறது.

சோசலிசத்தின் கீழ் அறிவியல் என்பது, படைப்பாற்றல் மற்றும் முன்னெப்போதும் கண்டிராத அளவிலான சமூக முன்னேற்றத்தின் ஒரு வலிமையான ஆயுதமாகிறது.

சோசலிச அமைப்பு, ஆராய்ச்சிகளை அரசின் பொதுவான திட்டமிடப்பட்ட வழிகாட்டுதலில் மக்கள் அனைவருக்கும் பயனுள்ள வகையில் மேற்கொள்ள சமூகத்திற்கு வாய்ப்பளிக்கிறது.

ஏராளமான அறிவியல் நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும் சோசலிச சமூக அமைப்பு உதவும். இதனால் விஞ்ஞானிகள் மிக முக்கியமான பிரச்சினைகளில் கவனம் செலுத்த முடியும். சோசலிச சமூகத்தில் நிலவும் இயங்கியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டம்,

அறிவியலை பிற்போக்குவாதம் மற்றும் மதத்தின் மோசமான செல்வாக்கிலிருந்து விடுவிக்கும்.

விஞ்ஞானிகளை, உண்மையான அறிவியல் வழிமுறையுடன் பிணைக்கிறது.உண்மையான அறிவியல் முறைமை என்ற ஆயுதத்தை விஞ்ஞானிகளுக்கு வழங்குகிறது.

ஆனால், முதலாளித்துவத்தில் அறிவியல் தொழிலாளி வர்க்கத்திடமிருந்து பிரிக்கப்படுகிறது. மூலதனம் அறிவியலை, உழைப்பைச் சுரண்டுவதற்குப் பயன்படுத்துகிறது. அறிவியல் லாபத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் சோசலிசத்தில், அறிவியல் தொழிலாளி வர்க்கத்துடன் இணைக்கப்படுகிறது. இது சோசலிச உற்பத்திக்கும் மக்களின் பொருளாயாத மற்றும் கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. அறிவியல் மக்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

சோசலிசத்தை கட்டியெழுப்ப அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெறுவது முக்கியம் என்று லெனின் கருதினார்.

## அறிவியல் ஓர் உற்பத்தி சக்தி

அறிவியல் வேகமான முறையில், அளப்பரிய உற்பத்தி சக்தியாக மாறி வருகிறது. அறிவியல் நேரடி உற்பத்தி சக்தியாக மாறுகிறது என்பது, ஏதோ உற்பத்தி சக்திகள் மற்றும் உற்பத்தியில் ஈடுபடும் மனிதர்களுடன் தொடர்பின்றி, சுதந்திரமான உற்பத்திச் சக்தியாக அறிவியல் செயல்படுகிறது என்று பொருளல்ல.

தொழில்நுட்பம் மற்றும் மனிதர்கள் உழைப்பு மூலம் மட்டுமே உற்பத்தி சக்தியாக அறிவியல் செயல்படுகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப புரட்சி, இயற்கையாகவே உற்பத்தி தொழில் நுட்பத்தில் ஆழமான பண்பியல் ரீதியான மாற்றங்களை அறிமுகப்படுத்துகிறது.

அறிவியல் சாதனைகள் என்பது, மேம்பட்ட உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் பொதிந்துள்ளன.

இன்று அணுசக்தி, பாலிமர் வேதியியல், நுண்ணுயிரியல், மின்னணுவியல் போன்ற தொழில்களும் அறிவியலின் உருவாக்கங்களாகும். அறிவியலின்றி அவை இருக்க முடியாது.

உற்பத்தி என்பது, அறிவியலைத் தொழில்நுட்பம் மூலம் பயன்படுத்தும் நடைமுறையாக மாறிவருகிறது. பொருளாயத சக்தியாக்கப்பட்ட அறிவாகவும் உற்பத்தி விளங்குகிறது. அண்மைக்கால அறிவியல் கண்டுபிடிப்புகள் முழுமை படுத்தப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும் ஒரு பிரம்மாண்டமான ஆய்வகமாகவும் உற்பத்தி நடைமுறை மாறி வருகிறது.

அறிவியல் சாதனைகள் உற்பத்தியாளரில், அவரது அறிவில், திறனில் மற்றும் உழைப்பு சார் அனுபவத்தில் பொதிந்துவிடுகிறது.

நவீன ஒருங்கிணைந்த இயந்திரமயமாக்கல், உழைப்பை அறிவுசார் உள்ளடக்கத்தால் நிரப்புகிறது. அது உழைப்பாளி, உயர்ந்த கலாச்சார, தொழில்நுட்ப மற்றும் தரமான தொழில்சார் திறமைகளை கொண்டிருக்க வேண்டும் என்று கோருகிறது.

உழைப்பாளிக்கு நவீன அறிவியல் வழங்கப்படுவது என்பது, அவரது திறனை மேம்படுகிறது, உற்பத்தித்திறனை அதிகரிக்கிறது. அவரை ஒரு செயலூக்கமுள்ள கண்டுபிடிப்பாளராகவும், பகுத்தறிவாளராகவும் மாற்றுகிறது. அவரது ஆராய்ச்சிப் பணி, உற்பத்தித் துறையில் ஆழமாக ஊடுருவி, பயன்மிகுந்த பணியாக மாறி விடுகிறது. அறிவியல் நவீன உற்பத்தியின் அடிப்படை கூறுகளில் ஒன்றாக மாறி வருகிறது.

அறிவியல் நேரடி உற்பத்தி சக்தியாக மாறி வருகிறது என்று நாம் கூறும்போது, இது முதலில் எந்திரவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் பிற இயற்கை மற்றும் தொழில்நுட்ப அறிவியல்களுக்குப் பொருந்தும்.

அதேநேரத்தில் சமூக அறிவியல், குறிப்பாக பொருளாதார அறிவியல்கள், உற்பத்தியில் தனது பங்பை அதிகரித்து வருகின்றன.

கணித முறைகள் மற்றும் மின்னணு கணினிகளின் உதவியுடன், இந்த அறிவியல்கள், உற்பத்தி மேலாண்மையை மேம்படுத்துகின்றன.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

<u>தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.2152 கோடி பறிப்பு</u>

## ஒன்றிய அரசின் அரசியல் பழிவாங்கும் செயல்

2024–2025 நடப்பு கல்வியாண்டிற்கான சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் பள்ளி மாணவர்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2152 கோடி நிதியை ஒன்றிய பி.ஜே.பி அரசு பறித்துள்ள நடவடிக்கை படுமோசமான அரசியல் பழிவாங்கும் செயல்.

நடப்புக் கல்வியாண்டில் ஜூன் 2024 தொடங்கி மே 2025 மாதம் முடிய உள்ளது. கடந்த மார்ச் மாதமே இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசால் ஏற்கப்பட்ட நிலையில் கல்வியாண்டு மே மாதம் முடிய உள்ள நிலையிலும் ஒன்றிய அரசு நிதியை வழங்கவில்லை என்பது நமக்கு பெரிய ஏமாற்றமே.

நமக்கு வரவேண்டிய நிதியை ஒன்றிய பி.ஜே.பி அரசானது பி.ஜே.பி ஆளும் மாநிலங்களான உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத் போன்ற பிற மாநிலங்களுக்குத் திருப்பிவிடப் பட்டுள்ளது என்பது பெரிய அதிர்ச்சி அளிக்கிறது. இதனை தமிழ்நாடு கல்வி பாதுகாப்பு இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மாணவர்களுக்கான நிதியைப் பறிக்கும் இதுபோன்ற கீழ்தரமான செயலை இந்திய அரசியல் வரலாற்றில் வேறு எந்த பிரதமரும் செய்யத் துணிந்தது இல்லை.

எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்கள் அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்படுகின்றன என்பது நமக்குத் தெரிந்த கதைதான். கட்சிகளைப் பிளவுபடுத்தி ஆட்சியைக் கவிழ்ப்பதும் நமக்குத் தெரிந்த கதைதான்.

மும்மொழிக் கொள்கையை ஏற்கவில்லை என்பதாலேயே தமிழ்நாட்டின் மீது தொடர்த் தாக்குதலை ஒன்றிய பி.ஜே.பி அரசு தொடுத்துள்ளது. குறிப்பாக மாணவர்களுக்கான கல்விநிதியைப் பறித்துள்ளது பி.ஜே.பி அரசின் ஆணவத்தின் உச்சம்.

நேரடியாகச் சொல்கிறோம், பள்ளிக் கல்வியில் இந்தியாவில் இரண்டாம் இடத்திலும் உயர் கல்வியில் முதல் இடத்திலும் தமிழ்நாடு இருந்து வருகிறது.

எங்கள் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களுக்குத் திருப்பிவிடப்பட்டதால் பி.ஜே.பி ஆளும் மாநிலங்கள் கல்விநிலையில் எங்கள் தமிழ்நாட்டை எட்டிப்பிடிக்க முடியாது என்பதை உணருங்கள்.

போலிப் பல்கலைக்கழங்களை வைத்து, போலிச் சான்றிதழ்களையும் உருவாக்கி, உங்களுக்கு நீங்களே பட்டம் கொடுத்துக் கொள்கிறீர்கள்! உங்களுக்கு அந்தத் தேவை இருப்பதால் அந்தப் போலிகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

எங்கள் தமிழ்நாடு 'கல்வி சிறந்த தமிழ்நாடு'. இன்றும் என்றும் உயர்ந்து கொண்டேதான் இருக்கும்.

உங்கள் நிதி உதவி இல்லாமலேயே சவால்களைச் சந்தித்தும், முறியடித்தும் முன்னேறி வருவது எங்கள் தமிழ்நாட்டின் வரலாறு.

எங்கள் மாணவர்களை வஞ்சித்து உத்திரப்பிரதேசம் மத்தியப்பிரதேசம் குஜராத் பீகார் மாணவர்களை வாழவைக்கும் பி.ஜே.பி. அரசின் திட்டம் நிறைவேறாது. எத்தனை சதித்திட்டம் ஒன்றிய அரசால் ஏவப்பட்டாலும் தமிழ்நாட்டைப் பின்னுக்குத் தள்ளும் அவர்களின் தீய நோக்கம் நிறைவேறாது.

ஒன்றிய அரசு சூழ்ச்சிகள் மூலமாகவே ஆட்சி செய்து வருகிறது. ஏவப்படும் சதித்திட்டங்களை அனைவரும் சேர்ந்தே முறியடிப்போம்.

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்;
மன்னர்க்குத் தன் தேசம் அல்லால் சிறப்பில்லை,
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு''

என்று தமிழ் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது.

தமிழ்நாட்டின் ஆசிரியர் இயக்கம் போராட்ட அனுபவம் வாய்ந்தது. கல்வி உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நேரம் இது. ஆசிரியர் அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, பொது நல அமைப்புகளோடு இணைந்து குரல் கொடுத்தாக வேண்டும்.

**– டி.சுப்பிரமணியம்**

# முன்னேற்
# இந்தி வே

**இந்து தமிழ் திசை கட்டுரைக்கு மறுப்பு**

இந்து தமிழ் திசை, புதுசாக சிந்திப்போம் என்ற தலைப்பில், மும்மொழிக் கொள்கை என்பது வெறும் வறட்டு அரசியல் தான் என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறது.

"மாணவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு, இன்றைய காலகட்டத்திற்கு எது தேவை என்பதை முடிவு செய்ய வேண்டும். வேலைவாய்ப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல விஷயங்கள் உலகமயமாகிவிட்ட சூழ்நிலையில், அன்றைக்கு தலைவர்கள் எடுத்த இருமொழிக் கொள்கை இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறதா என்பதை அறிவார்ந்த கல்வி யாளர்களை வைத்து விவாதித்து அவர்கள் அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் முடிவெடுப்பதே எதிர்கால சந்ததியினருக்கு செய்யும் கடமை" என்று கூறுவதன் மூலம், ஏதோ தமிழ்நாட்டு மாணவர்களுக்கு தீங்கு இழைக்கப்படுவது போன்ற ஒரு பிம்பத்தை அது கட்டமைக்கிறது.

பா.ச.க.வும், அதன் பரிவாரங்களும், அடிப்பொடிகளும், தமிழ் மக்களிடம் பாசம் கொண்டது போல நடிக்கும் பாவனைகளை,

சிறந்த கல்வியாளரும், ஆய்வாளரும், எழுத்தாளருமான மே.து.ராசுகுமார் அவர்கள் இரண்டு கட்டுரைகளில் தோல் உரித்து காட்டுகிறார். அதன் முதல் பகுதி இது!



மே.து.ரா.

**மீண்டும் இந்தித் திணிப்புப் புதிய வடிவில் வருகிறது. அவ்வப்போது இந்தி குறித்த அச்சுறுத்தல்கள் தோன்றி முன்னெழுந்தாலும், இந்தி மொழியினை வலியுறுத்துவதும், அதன் வழியாகச் சமக்கிருதக் கல்விக்கு அடித்தளம் அமைக்க முயல்வதும் தொடர் நிகழ்வுகளாகவே இருந்து வருகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.**

தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி ஆகியவற்றில் தாய் மொழி, அறிவு மொழி, தொடர்பு மொழி எனப் பல்வேறு நிலைகளில் மொழிகளைக் கற்றுக்கொள்வதாக மட்டுமே இன்றைய சிக்கல் இருக்கவில்லை.

மாறாக, மக்களது அன்றாட வாழ்முறையில் மொழிகளின் பயன்பாடு, இன்றியமையாமை, வேண்டல், வழியில்லாமை, பண்பாட்டுச் சூழல் என்பன போன்ற பல கூறுகளும் மொழிகளைத் தெரிந்துகொள்வதில் அடங்குகின்றன என்பதுதான் உண்மை.

பள்ளியில் மூன்று ஆண்டுகளோ அல்லது சில ஆண்டுகளோ, பயன் எதுவுமில்லாமல், கற்று மறப்பதற்காக மட்டுமே கல்விப் பாடத்தில் மூன்றாவதாக ஒரு மொழியினைக் கற்றாகவேண்டும் என்று வற்புறுத்தப்படுவதால் பெரும் எதிர்ப்புகள் உருவாகின்றன.

எந்த மொழியாக இருந்தாலும், அந்த மொழியினைக் கற்பது நல்லது என்று கூறுவதோ, பயன்படும் என்று நம்பவைக்க முனைவதோ எந்த அளவுக்கு ஏற்புடையது என்பதைத் தெளிவுபடுத்தியாகவேண்டும். அப்படிக் கூறுதற்குச் சில அடிப்படைகளும் இருந்தாகவேண்டும். இன்று மூன்றாவது மொழியாக இந்தி அல்லது இந்திய மொழிகளில் ஒன்று இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவோர், கீழ்க்கண்டவற்றில் ஏதாவது ஒன்றுக்காக அந்த மூன்றாவது மொழி வேண்டப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

1. தாய் மொழி
2. அறிவு மொழி
3. வேலை வாய்ப்பு மொழி
4. பெரும்பான்மை மொழி
5. தொடர்பு மொழி
6. இணைப்பு மொழி
7. ஆட்சி மொழி
8. வணிக மொழி
9. சமய பண்பாட்டு மொழி
10. இலக்கிய வள மொழி
11. அரசியல் செயல்பாட்டு மொழி
12. நடைமுறை மொழியறிவு

ஆகிய இவற்றுள் ஏதாவதொரு வேண்டலைக் கருதியே ஒரு மொழியினைக் கற்பது அமைய முடியும். தமிழ்நாட்டின் பின்னணியில், இவையல்லாமல் வேறு ஏதேனும் காரணிகள் இருந்தால், அவற்றை ஒன்றிய அரசும் தமிழகப் பா.ச.க.வினரும்தான் எடுத்துக் கூறவேண்டும்.

எத்தகைய வேண்டலும் இல்லாமல், பயனும் இல்லாமல் ஒரு கொள்கையாக அல்லது கோட்பாடாக வகுக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக மட்டுமே மூன்றாவது மொழியினைக் கற்றாகவேண்டுமென ஓர் இனத்தினை வலியுறுத்துவது பொருந்துவதாகத் தெரியவில்லை.

தாய் மொழியாக அமைவது உயிர் மூச்சாக வாழ்வோடு இணைந்திருப்பதாகும். உரையாடல்களைத் தொடங்கவும் உள்ளங்களைத் தொடவும் உணர்வுகளைத் தொடரவும் உரிமைகளைத் தேடவும் கருத்துக்களைப் பகிரவும் எனப் பல வகைகளில் மனித வாழ்வில் பிணைந்திருப்பது தாய் மொழிதான். ஆகவேதான், தாய்மொழி அறிவு மனித இனங்கள் அனைத்திலும் முன்னிலை பெறுகிறது.

அடுத்து, தாய் மொழிக்கு அப்பால் கிடைக்கக்கூடிய பிற அறிதல்கள் அனைத்தையும் பெறுவதற்கான ஊடகமாக அறிவு மொழி அமைகிறது.

மனித முன்னேற்றத்திற்கான, வளர்ச்சிக்கான, வளத்துக்கான, வாய்ப்புகளுக்கான கருவியாக அறிவு மொழி திகழ்கிறது. தாய் மொழியானது, அறிவு மொழியாக இல்லாத எதிர்பாராத ஒரு சூழல் இருந்துவிட்டால், அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்ற கருவியாக அறிவு மொழி பயன்படுகிறது. இந்தியாவில் ஆங்கிலம் அத்தகையதொரு இடத்தினைப் பிடித்திருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இந்தி உள்ளிட்ட பிற தாய் மொழிகள் அனைத்தும் அறிவு மொழியாக வளர்த்தெடுக்கப்படவில்லை என்கின்ற பின்புலத்தில்தான் ஆங்கிலம் அந்த இடத்தைப் பெறுகிறது.

இந்தி கற்றால் வேலை வாய்ப்புகள் மிகும் என்ற மாயையினை முன்னிறுத்தி அச்சுறுத்துவது இன்று பொருத்தமற்றதாகும். நாடு விடுதலை அடைந்தபோது ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் பணிகளை நம்பியே பெரிதும் இருக்கவேண்டியிருந்தது. தொழில், வணிக வளர்ச்சியில் முன்னேற்றம் காணாத காலமது. ஆனால், இன்று நிலைமைகள் மாறிவிட்டன. பெரும் தொழில்கள், குறுந்தொழில்கள் எனப் பலவும் பெருகிவிட்டன. குறிப்பாக, தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னிலை மாநிலமாகத் திகழ்கிறது.

அதனால்தான், வடநாட்டினர் பலர் தமிழகத்திற்குத் திரண்டு வருகின்றனர். தமிழ்நாட்டிலேயே வேலைக்கான வாய்ப்புகள் கொட்டிக் கிடப்பதால், உடல் உழைப்புப் பணிகளுக்குத் தமிழ் நாட்டினர் வேறு மாநிலங்களுக்கு செல்லும் நிலை




**பிளாக்மெயில் அரசியல்**



"மும்மொழி கொள்கையை ஏற்றால்தான் தமிழகத்திற்கு கல்வி நிதியை தருவோம் என பிளாக்மெயில் செய்வது அரசியல் இல்லையா? என முதல்வர் ஸ்டாலின் காட்டமாக கேட்டுள்ளார். கல்வியில் அரசியல் செய்யாதீர்கள் என முதல்வருக்கு மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கடிதம் எழுதிய நிலையில், "கல்வி கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிப்பதும், இந்தியாவை ஒற்றை இன நாடாக மாற்ற நினைப்பதும் அரசியல் இல்லையா?"

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**

**மாநில அரசு அனுமதியின்றி சிபிஎஸ்இ பள்ளி தொடங்கலாம்: மத்திய அரசு**


மாநில அரசின் அனுமதி இல்லாமலேயே இனி சிபிஎஸ்இ பள்ளிகளைத் தொடங்கலாம் என மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. புதிய விதிமுறைகளின்படி, தனியார் சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெற, மாநில அரசின் தடையில்லாச் சான்று தேவையில்லை, அங்கீகாரம் கோரி நேரடியாக விண்ணப்பிக்கலாம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. மாநில அரசு ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில், விண்ணப்பிக்கும் பள்ளிக்கு அனுமதி வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

# றாத மூன்றாவது மொழி
# ண்டவே வேண்டாம்

ஏற்படவில்லை. இதனால், தமிழர்கள் மூன்றாவது மொழியாக இந்தி போன்ற எந்த மொழியையும் கற்றுக்கொள்ள வேண்டிய நிலை இங்கு இப்போது இல்லை. மாறாக, பிற மாநிலத்தோர்தாம் தமிழ்நாடு வந்தவுடன் தமிழைப் பயன்பாட்டு மொழியாகக் கற்றுக் கொள்கின்றனர்.

உடல் உழைப்பு அல்லாத பிற பணிகளுக்கு, அறிவு மொழியாக உள்ள ஆங்கிலமே போதுமானதாக இருந்துவிடுகிறது. இந்தியின் பயன்பாடு அங்கு வேண்டப்படுவதில்லை.

வாழிடங்களில் உள்ள மக்களோடு தொடர்புகொள்ள, தாய் மொழி அல்லாத வேறொன்று வேண்டியிருக்குமானால், அந்த மொழியினைப் பயில்வது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிடுகிறது. உடன்வாழும் வேற்று மொழியினர் புறக்கணித்துவிட முடியாது. தமிழ்நாட்டைப் பொருத்தவரை இந்தி அல்லது வேறோர் இந்திய மொழி பயன்பாட்டு மொழியாக இல்லை. தமிழ்நாட்டின் எல்லைப்புறங்களில் இருக்கின்ற வேற்றின மக்களும் பிற பகுதிகளில் வாழ்வோரும் தாங்கள் வாழ்கின்ற இடத்தின் பெரும்பான்மை



மொழியான தமிழைத் தாங்களாகவே கற்றுக்கொள்கின்றனர்.

இந்த நிலையில், இந்தி போன்ற வேறொரு மொழி, வாழிட மொழியாகத் தமிழின் இடத்தைப் பிடிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை.

நாடு அல்லது ஒன்றியம் அல்லது கூட்டரசுகளில், தொடர்புகொள்ள ஒரு மொழி இருந்தாகவேண்டும் எனச் சொல்லப்படுகிறது. இந்திய ஒன்றியத்தில் அறிவு மொழியாக அமையும் ஆங்கில மொழியே இத்தகைய பங்களிப்பினைச் செய்துவிடுவதால், தொடர்புக்கெனத் தனியொரு மொழி வேண்டியதில்லை என்பதையும் நோக்கவேண்டும். இணைப்பு மொழிக்கும் இதுவே ஒத்ததாகின்றது.

மக்களுக்குத் தெரிந்திருக்கின்ற, குறிப்பாக மக்களோடு தொடர்புகொள்கின்ற ஆட்சி அலுவலர்களுக்குத் தெரிந்திருக்கின்ற மொழிதான் ஆட்சி மொழியாக அமைய முடியும். இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமென்றால், பல மொழிகள் பேசுகின்ற இந்தியா போன்ற கூட்டாட்சி நாடுகளில், அனைவருக்கும் அறிமுகமாகியுள்ள ஆங்கிலம் அல்லது தாங்கள் திணிக்க விழையும் இந்தி போன்ற மொழிகளில் அந்தந்த மாநிலங்களோடு ஒன்றிய அரசு தொடர்புகொண்டால், அவற்றைப் புரிந்துகொள்கின்ற அறிவு மாநிலத் தலைமைச் செயலகத்தின் பணியாளர்களுக்கு இருந்தால் போதுமானது. தங்களது மாநில மொழிகளில் அவர்கள் அன்றாட அலுவல்களுக்கான அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கிவிடுவார்கள். இதற்காக மாநிலத்தில் வாழ்கின்ற அனைவரும் பயனில்லாமல், இந்தியைப் படித்தாகவேண்டும் என்று வலியுறுத்தவேண்டியதில்லை.

## மூன்றாவது மொழி தேவையில்லை



மூன்றாவது மொழி குழந்தைகளுக்கு சுமையை தான் உருவாக்கும். இருமொழி வழிக் கல்வியால் நாம் இழந்தது எதுவுமே இல்லை. எனவே அடிப்படைக் கல்வியில் மூன்றாவது மொழி தேவையில்லாத ஒன்றுதான்.

இஸ்ரோ முன்னாள் இயக்குனர்
டாக்டர்.**மயில்சாமி அண்ணாதுரை**

அத்துடன், வேறு மாற்று இல்லாமல் ஆங்கிலம் தொடர்ந்துகொண்டிருப்பதால், மாணவர் அனைவரும், மக்கள் அனைவரும் இந்தி மொழியைக் கற்கவேண்டும் என்று திணிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகத் தெரியவில்லை. எப்படியிருப்பினும், தலைமைச் செயலக அலுவலகத்தில் மொழிபெயர்ப்புக்காக இருப்போர் மட்டுமே வேண்டுமானால் மூன்றாவது மொழியினை அறிந்திருந்தால் போதுமானது.

மேலும், ஆட்சி மொழி என்ற இடத்தை இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தி மொழிக்கு வழங்கவில்லை, வழங்கப் போவதுமில்லை என்பதையும் கணக்கில் கொள்ளவேண்டும்.

வணிக மொழி என்பது வாங்குவோர் அல்லது பயன்படுத்துவோர் தொடர்புடையது அல்ல. விற்போர் தொடர்புடையதாகவும் இருக்கவில்லை. பொருள் உற்பத்தியாளர், பொருள்களை வாங்கி வழங்குவோர், வணிக முகவர் போன்றோர் மட்டுமே வணிகப் பகிர்வில் ஈடுபடுகின்றனர். இவர்கள் அனைவரும் இந்தி பேசும் மாநிலங்களைச் சார்ந்தோராக மட்டுமே இருக்கவில்லை. பல மொழிகள் பேசும் பல மாநிலங்களில் இத்தகையோர் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வணிகத் தொடர்புக்குப் பயன்படுத்தக்கூடிய மொழியினைத் தாங்களாகவே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.

இத்தகைய மொழியறிதல், கல்விக்கூடத்தில் பெற்றதாகப் பெரிதும் இருப்பதில்லை. அன்றாட வணிக வாழ்வுச் சூழல் அவர்களுக்கு வேண்டிய மொழி அல்லது மொழிகளைக் கற்றுத் தந்துவிடுகிறது. மக்கள் தொகையில் 0.001%க்கும் குறைவானோர் ஈடுபட்டிருக்கும் வணிகச் செயல்பாடுகளுக்காக ஓரினத்தின் அனைத்து மக்களையும் இந்தி மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று திணிப்பது வன்மத்தையே காட்டுகிறது.

சமயப் பண்பாட்டு மொழியாக இந்தி என்றும் இருந்ததில்லை. வேற்று ஆட்சியர் காலத்தில், சமயப் பரப்பலுக்காக இன்றைய இந்திய ஒன்றியத்தின் பல பகுதிகளுக்கும் வந்திறங்கிய கிருத்துவப் பற்றாளர் பலரும் உள்ளூர் மொழிகளைக் கற்று, அவற்றின் வழியாகத்தான் சமய மாற்றங்களையும் பரப்புரைகளையும் செய்துவந்தனர்.

ஆங்கில ஆட்சியின் பரப்பு அடுத்தடுத்து மிகுந்ததால், ஆங்கிலம் எளிதில் பரவியது. அத்துடன், அறிவியல் பாடங்களையும் தங்களது கல்வித் திட்டத்தில் அவர்கள் இணைத்துக்கொண்டனர். இதனால், சமயம் அல்லது பண்பாட்டு அல்லது ஆட்சிநிலைகளில் ஆங்கிலம் இங்கு புகுத்தப்படவில்லை. மாறாக, அறிவு மொழியாகக் கற்றுத்தரப்பட்டதால், தானாகப் புகுந்து நிலைகொண்டுவிட்டது.

ஆனால், இந்தி மொழி இத்தகைய பங்காற்றுவதற்கான உயர்விடம் பெறவில்லை என்பதால் அந்த மொழியினைக் கற்பதிலும் கற்றுத் தருவதிலும் பயன் ஏதுமில்லை. சமக்கிருதம் பண்பாட்டளவில், ஊடுருவ முயன்றாலும், மொழியாக மக்களிடம் சென்றுசேரவில்லை. எனவே, அதனை ஒரு மொழியாகவே தமிழர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. சமக்கிருதத்தைப் பயில்வதால் பயனில்லை என்பதும் வெளிப்படையாக அறிந்தவொன்றாக இருக்கிறது.

இலக்கிய வளத்துக்காகவே ரசிய, பிரெஞ்சு மொழிகளைக் கற்க வேண்டுமென ஒரு காலத்தில் கருதப்பட்டது. அந்த மொழிகளில் இருந்த இலக்கியங்கள் அத்தகைய மேன்மையினைப் பெற்றிருந்தன என்பதையும் மறுப்பதற்கில்லை. சமக்கிருதம் இந்த உயரத்தினை எட்டுதற்கான முயற்சிகள் பலவற்றை எடுத்துக்கொண்டாலும், புதுமைகள் ஏதுமின்றிப் பழமையினை மட்டுமே பிடித்துக்கொண்டிருந்ததால் அது எடுபடவில்லை. சமக்கிருத ஆர்வலர் சிலரது எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை.

தமிழுக்கு இத்தகையதொரு தகுதி இருந்தாலும், ஏற்றுவாரும் போற்றுவாரும் இல்லாததால், ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை முற்றிலுமாகப் புறந்தள்ளிவிட முடியாது. தொடக்க காலத் தமிழறிஞர்களில் பலர் பார்ப்பனராக இருந்ததால், சமக்கிருதத்தை முன்னுறுத்தித் தமிழின் பெருமையை மறைத்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் அண்மைக் கால அகழ்வுகளும் அவற்றையொட்டிய ஆய்வுகளும் தமிழின் பண்பாட்டுச் சிறப்பை உறுதிப்படுத்தியுள்ளன.

தமிழின் தற்காலப் படைப்புகள் பலவும் வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. தரமும் தகுதியும் கொண்ட பெரும்பாலான படைப்புகள் பல மொழிகளில் பெயர்க்கப்படுகின்றன. இவற்றுக்காக மட்டுமே ஒரு மொழியினை அனைவரும் பயிலவேண்டும் என்ற நிலை தற்போது உலகெங்கும் இல்லாமல் போய்விட்டது.

ஆய்வில் ஈடுபடுவோர் அல்லது ஈடுபாடு கொண்டோர் மட்டுமே தங்களுக்கு வேண்டிய மொழியினைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். மற்றபடி, மொழிபெயர்ப்புப் பணிகளைச் செய்வோர் இந்தி அல்லது தங்களது தேர்வுக்கான மொழியினைக் கற்றுக்கொண்டால் போதுமானது என்பது இன்று நடைமுறைக்கு வந்துவிட்டது. இதற்காக, மக்கள் அனைவரும் மூன்றாவது மொழியொன்றைக் கற்றுக்கொள்ளவேண்டும் என வற்புறுத்த வேண்டியதில்லை.

மேலும், எந்தக் காலத்திலும் கற்றுக்கொண்டாகவேண்டும் என்ற தகுதியை இந்தி எட்டிப்பிடித்ததுமில்லை.

உலகின் எந்த ஒரு நாட்டிலும் அரசியல் செயல்பாடுகளுக்காகத் தனியாக மொழி எதுவும் நிலைநிறுத்தப்பட்டதில்லை. அந்தந்த நாடுகளில், அந்தந்த மொழிகள் இத்தகைய பணிகளை எளிதில் நிறைவேற்றி வருகின்றன. இந்திய ஒன்றியத்தின் பெரும் தலைவர்கள் எவரும் மாநில மொழியினை ஒதுக்கிவிட்டு அரசியல் செய்ய முடிந்ததில்லை. மக்களைத் திரட்டுதல், கொள்கைகளைப் பரப்புதல், அமைப்புக்குள் கொண்டு வருதல் போன்ற அனைத்தையும் அந்தந்த இனத்து மொழியினைப் பயன்படுத்தியே செய்ய முடிகிறது.

உள்ளூர் மொழி தெரியாத தலைவர்கள், எந்த மொழியில் பேசினாலும் மொழிபெயர்ப்பாளர் உடன் நின்று மக்களிடம் உள்ளூர் மொழியில் செய்திகளைக் கொண்டு சேர்க்கிறார். சில வேலைகளில் தலைவர்களது சில வரிகள் உள்ளூர் மக்களுக்குப் புரியாது என்றால், மொழிபெயர்ப்போர் சிலவற்றைச் சேர்த்துச் சொல்வதும் நடக்கிறது. எனவே, இந்திய ஒன்றியத்தில் இந்தி மட்டுமே பொது வாழ்வுக்கு அல்லது அரசியல் செயல்பாட்டுக்குப் போதுமானதாக இருக்காது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

நடைமுறை மொழியறிவு என்பது பள்ளியில் அல்லது பயிற்சிக்கூடத்தில் படித்துத் தெரிவதல்ல. அன்றாட வாழ்முறையில் வேண்டல்களையும் பழகுதலையும் அடியொற்றித் தாமாகப் பெறுவது. சுற்றுலாச் செல்லும்போது பண்டைய இடங்கள், கோயில்கள், தங்கும் விடுதிகள், உணவிடம், போக்குவரவு போன்ற சூழல்களில் இந்தி மொழி பயன்படும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

## வெளியேறுங்கள்

‘இந்தி பேச முடியாவிட்டால் நாட்டை விட்டு வெளியேறுங்கள்’

“நீங்கள் இந்தியாவில் வசிக்கிறீர்கள் என்றால் இந்தியை நேசிக்க வேண்டும். இல்லையெனில், நீங்கள் வெளிநாட்டவராக கருதப்படுவீர்கள். இந்தி பேச முடியாவிட்டால் நாட்டை விட்டு வெளியேறி வேறு எங்காவது செல்லுங்கள்”

உத்தரப்பிரதேச பாஜக அமைச்சர்
**சஞ்சய் நிஷாத்**

முதலில் ஒன்றினை மனதில் கொள்ளவேண்டும். இந்திய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள இனங்களின் மக்கள் பெருமளவில் சுற்றுலாச் செல்லும் பொருளியல் வாய்ப்பில் இருக்கவில்லை. சுற்றுலாச் செல்வது என்று வந்தால்தான், அதற்கான மொழி வேண்டியிருக்கும். இவ்வாறாக. சுற்றுலாச் செல்வோர் மக்கள் தொகையில் ஒரு விழுக்காடுகூட இருக்கமாட்டார்கள். இந்தக் குறைந்த அளவு மக்களுக்காக அனைவரையும் இந்தி மொழி கற்கவேண்டும் எனக் கட்டளையிடுவது வேடிக்கையாகவே இருக்கிறது.

சுற்றுலாச் செல்லும் இடங்களில் எதிர்கொள்ளும் மனிதர்களில் பெரும்பாலானோர் பல மொழிகளைத் தெரிந்தோராகவே உள்ளனர். இந்தி மாநிலங்களாக இருந்தாலும் பிற இன மக்களது மாநிலங்களாக இருந்தாலும் இது இயல்பாக அமைந்துவிடுகிறது. திருப்பதி கோயிலுக்குப் போவோருக்குத் தமிழ் மட்டுமே தெரிந்திருந்தால் போதும். வடநாட்டில் இருந்து ராமேசுவரம் வரும்போது இந்தி மட்டும் போதுமானது. இந்தி தெரியாமலும் இருக்கலாம். ஆங்கிலம் தெரியாமல் தமிழை மட்டும் வைத்துக்கொண்டு பண்டை நாளிலிருந்து இன்று வரை காசிக்குச் சென்று வருவோர் பலர்.

சென்னை நடுவண் ரயில் நிலையத்தில் உள்ள சுமை தூக்குவோருக்குப் பல பழமொழிகள் தெரியும். மாமல்லபுரம், தாசுமகால் போன்ற இடங்களில் உள்ள வழிகாட்டிகள், பல மொழிகளைத் தாமாகவே கற்றுப் பயன்படுத்துகின்றனர். பல மாநிலங்கள் வழியாகப் பயணம் செல்லும் சுமையுந்து ஓட்டுநர்கள், அவர்கள் செல்லுமிடங்களில் உள்ள மொழிகளைத் தெரிந்து வைத்திருக்கின்றனர்.

பள்ளியில் கற்றுத்தான் இத்தகைய மொழியறிவு பெறவேண்டும் என்னும் நிலை அவர்களுக்கு வந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால், இவர்களில் பலர் பள்ளிப் படிப்பைக்கூடத் தாண்டாதோர் ஆவர். ஆனால், எட்டாக் கனியாகத் தெரியும் ஆங்கிலத்திலும் பேசித் தாங்கள் கூறவேண்டிய விவரங்களை விரிவாக எடுத்துரைத்துவிடுகின்றனர்.

மேற்கண்ட பல நிலைகளிலும், இந்தி மொழியறிவு அல்லது அறிமுகம் எந்தவகையிலும் மக்களுக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் பயன்படுவதில்லை என்பதை அறிய முடிகிறது. அத்துடன், தாய் மொழி, ஆங்கில அறிவு மொழி அல்லாத மூன்றாவது மொழியாக இந்தி அல்லது வேறொரு இந்திய மொழியினை அவர்களது வாழ்நாளில் என்றாவது பயன்படுத்தவேண்டியிருக்கும் எனக் கருதத்தக்கோர் தமிழ்நாட்டில் மிகக் குறைவானோர் என்பதைவிட, அரிதாக ஒரு சிலரே என்பதும் தெளிவாகிறது.

வரலாறு, பண்பாடு, சமூக உணர்வுகள், அரசியல் போன்ற அனைத்துக்கும் அப்பால் நோக்கினாலும், இந்தி மொழியினைக் கற்றுக்கொள்வதால் தமிழர்கள் யாதொரு பயனையும் அடையப் போவதில்லை என்பதை ஒதுக்கித்தள்ளிவிடக்கூடாது.

அதே போன்று, பொருளியல், உரிமை, வளர்ச்சி, முன்னேற்றம், வாய்ப்புகள், வளம், அரசியல் என்பன போன்ற எந்த அளவில் எடுத்துக்கொண்டாலும், இந்தி மொழியைக் கற்றுக்கொள்ளாமல் இருப்பதால், தமிழர்கள் எதையும் இழந்துவிடப் போவதில்லை என்பதையும் புறக்கணித்துவிட முடியாது.

பயனில்லாமை, இழப்பில்லாமை என்ற இரண்டையும் நடுநிலையில் நின்று பார்க்கும்போது, இந்தி மொழி வேண்டியதில்லை என்பதிலும் இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலும் தமிழ் மக்களிடமுள்ள உறுதியையும் நேர்மையையும் புரிந்துகொள்ளலாம்.

தொடர்புக்கு : 9444075561

# கோட்டூர் பெ.அருணாசலம் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடி கோட்டூர் பெ.அருணாசலம் மறைவுக்கு, கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டக் கட்சியின் முன்னோடியும், கோட்டூர் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவருமான பெ.அருணாசலம் (93) 21.02.2025 அன்று காலமானார்.

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், வெங்கத்தான்குடி ஊராட்சியில் உள்ள சிங்கமங்கலம் என்ற ஊரில், தியாகி பெருமாள் குடும்பத்தில் பிறந்தவர் பெ.அருணாசலம். சிறு வயது முதலே விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் இயக்கத்தில் பங்கேற்று, கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, இறுதி மூச்சுவரை செயல்பட்டு வந்தவர்.

வெங்கத்தான்குடி ஊராட்சித் தலைவராகச் செயல்பட்டு வந்த பெ.அருணாசலம், 1986 மக்களால் நேரடித் தேர்தல் முறையில் கோட்டூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். பிறகு மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகவும், கட்சியின் ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டக் குழு உறுப்பினர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர், விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர், மாவட்ட நிர்வாகக் குழு, மாநிலக் குழு உறுப்பினர் போன்ற பொறுப்புகளில் செயல்பட்டவர்.

எளிமையும், நேர்மையும் கொண்ட வாழ்க்கை நெறியில் வழுவாத முன்னுதாரணமாகத் திகழ்ந்த பெ.அருணாசலம் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவுக்குக் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தோழர் தா.பாண்டியன் நினைவேந்தல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் அவரது படத்திற்கு மாலை அணிவித்து மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் அஞ்சலி செலுத்தினார். இதில் வடசென்னை மாவட்ட செயலாளர் தா.கு. வெங்கடேசன், மாநிலக் குழு உறுப்பினர் ஏழுமலை, மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் க.இப்ராகிம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சந்தோஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**சேலம்:** மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் மாநிலச் செயலாளராக இரா.முத்தரசன் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார். இதில் மாவட்ட செயலாளர் மோகன் உள்ளிட்டர் உடன் இருந்தனர்.

# பட்டியல் இன மக்களுக்கு எதிராக சாதிய வன்கொடுமையை எதிர்த்துக் காத்திருப்புப் போராட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டம் பழனி மற்றும் தொப்பம்பட்டி பகுதியில் பட்டியல் இன மக்களுக்கு எதிராக சாதிய வன்கொடுமையை எதிர்த்து பழனியில் சார் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பாக (21.2.2025) ஏ.எம்.மணி தலைமையில் காத்திருப்புப் போராட்டம் நடைபெற்றது.

மு.வீரபாண்டியன் மாநிலத் துணைச் செயலாளர் அவர்கள் காத்திருப்புப் போராட்டத்திற்கான விளக்க உரை நிகழ்த்தினார். போராட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், வழக்கறிஞர் ஆர்.கிருஷ்ணன் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் தோழர் எம்.கணேசன், ஏ.கௌவுசல்யா மாவட்டக் குழு உறுப்பினர் பி.கிருஷ்ணசாமி, இரா.சிவராஜ் உள்ளிட்டு 300க்கும் மேற்பட்ட தோழர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் முடிவில் அமைதிப் பேச்சுவார்த்தையில் தோழர் மயில்ராஜ் அவர்களுக்கு 10 நாட்களுக்குள் பாதை சரி செய்து தருவதாகவும் ஆகாஷ் மரணத்திற்குக் காரணமான ஆசிரியர்களைப் பணியிடம் நீக்கம் செய்வதற்கும் ஆகாஷின் தாயாருக்கு அரசு வேலைக்குப் பரிந்துரைப்பதாக உறுதி கொடுத்ததன் அடிப்படையில் போராட்டம் தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# குற்றம் இழைத்த வங்கி அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் அறிக்கை

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் விடுக்கும் பத்திரிகைச் செய்தி :

ராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் அருகே உள்ள வரலை கிராமத்தைச் சார்ந்த பட்டியலின, மாற்றுத்திறனாளி பெண் பிரபாவதி மேல பார்த்திபனூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடந்த 10 ஆண்டுகளாக வாடிக்கையாளராக உள்ளார். இந்நிலையில் அவரது வங்கிக் கணக்கில் அவருக்குத் தெரியாமல் 18 லட்சம் ரூபாய் வீட்டுக் கடன் வாங்கி மோசடி நடைபெற்றுள்ளது. இதற்குக் காரணமானவர் அந்த வங்கியின் மேலாளராவார்.

இதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் மனு அளிக்கப்பட்ட பிறகு அவரது கடன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் அருண்குமார் திரும்பச் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இதுபோன்ற பல்வேறு முறைகேடுகள் அந்தப் பகுதியில் நடைபெற்று வருவதாகவும் பல தகவல்கள் வந்த வண்ணம் இருக்கின்றன.

எனவே, காவல்துறையும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுத்து குற்றம் இழைத்த வங்கி அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மிரட்டல்களை எதிர்கொள்ளும் பட்டியலின, மாற்றுத்திறனாளி பிரபாவதிக்கு உரிய பாதுகாப்பை தமிழ்நாடு அரசு வழங்கிட வேண்டும் எனவும் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் வலியுறுத்துகிறது.

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொருள்கள், தொழிலாளர் மற்றும் நிதி வளங்களை மிகவும் திறம்பட பயன்படுத்த, இக்கால பரந்த அளவிலான உற்பத்தியில் பொருளாதார அறிவியல்கள் (Economic Sciences) உதவுகின்றன.

தொழிலாளர்களின் சிந்தனைகளை வார்த்தெடுக்கவும், அவர்களின் கண்ணோட்டத்தை உருவாக்குவதிலும் சமூக அறிவியல்கள் (Social Sciences) பெரும் பங்கை வகிக்கின்றன.

மனித குலம் எதிர் கொள்ளும் அவசரப் பிரச்சினைகளுக்கு அறிவியல் தீர்வு காண்கிறது. அது மட்டுமன்றி, சமூக முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் புதிய பாதைகளைக் கண்டறிய உதவும் முக்கியமான கோட்பாட்டுப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவும் அறிவியல் உதவுகிறது.

சமூக வளர்ச்சியில் அறிவியல் ஒரு முற்போக்கான மற்றும் விடுதலைக்கான பங்கை வகிக்கிறது. அதன் கண்டுபிடிப்புகள் மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கூட்டு சக்தியை மேம்படுத்துகின்றன. மேலும் அறிவொளிக்கான வழிமுறையாகவும் செயல்படுகின்றன. தவறு மற்றும் மூடநம்பிக்கைகளை அகற்றி, இயற்கையைப் பற்றியும், தங்களைப் பற்றியும் சரியான அறிவை மனிதர்களுக்கு வழங்குகிறது.

### தொழில்நுட்பம் சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

அமில மழை, ஓசோன் படலத்தில் ஓட்டை விழுதல், மண் அரிப்பு, காடுகள் அழிப்பு போன்றவை பெரும் அச்சுருத்தலாக மாறியுள்ளன. வேதிப்பொருட்கள், அணுக்கழிவு உள்ளிட்ட கழிவுகளால் ஆறுகள் கடல்கள், சுற்றுச்சூழல் மாசடைகின்றன.

கடந்த சில நூற்றாண்டுகளாக கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தில் ஏற்பட்ட அதிவேக அதிகரிப்பால் புவி வெப்பம் அதிகரித்துவருகிறது. இதனால் கடலோர நகரங்கள் மற்றும் நகரங்கள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. நீண்ட வறட்சி மற்றும் கடுமையான புயல்கள் ஏற்படுகின்றன. பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுநோய்களின் தாக்கம் அதிகரிக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் எஸ்.டி.ஆர் மற்றும் உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், புவியில் ஒரு உயிரனமாக நாம் வாழும் நிலைக்குக் கூட அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது.

அராஜகமான, உடனடி லாபத்திற்கான முதலாளித்துவ உற்பத்தி நடவடிக்கையின் தீய பின்விளைவுகள் இயற்கையை கடுமையாக பாதித்துள்ளது. அதைப் பற்றிய சிந்தனையோ, அக்கறையோ, கவலையோ முதலாளிகளுக்கு இல்லை.

“இயற்கை மீதான, மனித வெற்றிகளைப் பற்றி அளவு கடந்து களியாட்டம் போட வேண்டியதில்லை. இயற்கையின் மீதான ஒவ்வொரு வெற்றிக்காகவும் இயற்கை நம்மை பழிவாங்கவே செய்கிறது. ஒவ்வொரு வெற்றியிலும் முதல் நிலையில் நாம் எதிர்பார்த்த பலன் கிட்டினாலும் இரண்டாம், மூன்றாம் நிலைகளில் முற்றிலும் வேறுபட்ட எதிர்பாராத விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றன. இயற்கைக்கு வெளியே நின்று கொண்டு அன்னிய ஆக்கிரமிப்பாளரைப் போல இயற்கையை வெல்ல முடியாது. ரத்தமும், சதையும், மூளையும் உள்ள நாம் இயற்கையின் பகுதியாய் உள்ளோம். இயற்கையின் மத்தியில் உள்ளோம். இயற்கையின் விதிகளைப் பயின்று அவற்றைச் சரியாக பயன்படுத்தும் வாய்ப்பை நாம் பெற்றிருப் பதாலேயே பிற உயிரினங்களை விட மேலானதாக நாம் உள்ளோம்“ (ஏங்கெல்ஸ் இயற்கையின் இயக்கவியல்) என ஏங்கல்ஸ் கூறினார்.

ஆனால், முதலாளிகளுக்கு இது பற்றி எல்லாம் கவலை இல்லை. அவர்களுக்குத் தேவை லாபம் மட்டுமே. இன்று அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் பல உலகளாவிய பிரச்சினைகளுடன் தொடர்புடைய அபாயங்களை நீக்குவதிலோ அல்லது குறைப்பதிலோ, ஓர் கருவியாக உள்ளது.

போர் மற்றும் ராணுவத் தளவாடங்கள் தயாரிப்புகளுக்காக ஒதுக்கப்படும் வளங்களில் ஒரு பகுதியை விவசாயத்திற்கு மாற்ற முடிந்தால், உணவுப் பிரச்சினை இருக்காது. முன்னாள் காலனிகள் மற்றும் அரை காலனிகளின் சமூகபொருளாதார பின்தங்கிய நிலையை சரிசெய்ய முடியும்.

இயற்கைப் பொருட்களுக்கு பதிலாக, மாற்றுப் பொருட்களை உருவாக்குவதற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உதவுகின்றன. அறிவியல் தொழில் நுட்பம் உருவாக்கும் பிரச்சினைகளுக்கு, அறிவியல் தொழில் நுட்பம் மூலமே தீர்வு காண முடியும். அதே சமயம் எஸ்.டி.ஆர் மூலம் இயற்கை வளங்களை கொள்ளையிடும், அழிக்கும் முதலாளித்துவம் ஒழிக்கப்பட வேண்டும்.

### வேலையின்மை

வேலையின்மை உழைக்கும் மக்கள் வாழ்வின் மீது பேரழிவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது குடும்பங்களை, மனித மதிப்புகளை மற்றும் சுய மரியாதையை அழிக்கிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றம் உற்பத்தியையும் அதன் விரிவாக்கத்தையும் துரிதப்படுத்துகிறது.

ரோபோக்களும், செயற்கை நுண்ணறிவும், தானியங்கி எந்திரங்களும் ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய நான்காவது தொழிற் புரட்சி கோடிக் கணக்கான மக்களின் வேலை வாய்ப்புகளை பறிக்கப் போகிறது. இது விரைவில் மிகப் பெரிய சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சாரப் பிரச்சினைகளை உருவாக்கும். வேலையின்மை பிரச்சினையை முதலாளித்துவத்தால் தீர்க்க முடியாது. சோசலிசத்தால் மட்டுமே தீர்க்க முடியும்.

டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத்,
டாக்டர் ஏ.ஆர்.சாந்தி
டாக்டர் ஜி.ரமேஷ்
9940664343

## இராமநாதபுரத்தில் டாஸ்மாக் கடையை அகற்ற கோரிக்கை



இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளம் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. இதில் கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள், திருப்புல்லாணி ஒன்றியச் செயலாளர் எம்.சொக்கலிங்கம், மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.லோகநாதன், மண்டபம் ஒன்றிய துணைச் செயலாளர் மணிமாறன், முதுகுளத்தூர் தாலுகா செயலாளர் ஜெயசீலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். டாஸ்மாக் மேலாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

### ஆட்சியர் அலுவலகம் முன்பு

## போராட்டம் நடத்த தடையை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம்



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மக்களுக்கான கோரிக்கைகளுக்குப் போராட்டங்கள் நடத்தக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது. இதைக் கண்டித்தும், தடையை மீறியும் ஆட்சியர் வளாகத்திற்குள் அனைத்துக் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் ஒன்றியச் செயலாளர் சக்கணன், நகரச் செயலாளர் காதர்முகையதின், சிபிஎம் மாவட்டச் செயலாளர் குருசாமி, முத்துக்குமார், மக்கள் நீதிமய்யம் காளிதாஸ், தமிழ்ப் புலிகள் வீரப்பெருமாள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியரிடம் மனுவும் கொடுக்கப்பட்டது.

## மாற்றுத் திறனாளிகளின் உரிமையைக் காத்திட வேண்டும்

அரசுப் பணியில் சேரும் மருத்துவர்களுக்கான கவுன்சிலிங் மூலம் 2600 க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், அரசு மருத்துவமனைகளில் நியமனம் செய்யப்படுவது வரவேற்கத்தக்கது. முதலில் மாற்றுத் திறனாளிகளுக்கான கவுன்சிலிங்கை நடத்திட வேண்டும். அவ்வாறு நடத்தப்படவில்லை என மாற்றுத் திறனாளி மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மாற்றுத் திறனாளிகள் மற்றும் சமூக நீதியில் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகளின் நலனை, உரிமையைக் காத்திட வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கான கவுன்சிலிங்கை முதலில் நடத்துவதின் மூலம், அவர்கள் தங்கள் சொந்த ஊர் மற்றும் வசிப்பிடம் அருகில் பணியிடங்களைத் தெரிவு செய்ய முடியும்.

பணியிடங்களை ஒதுக்குவதில் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கிட வேண்டும் என அரசாணையும் உள்ளது. எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில், அவர்களுக்கான கவுன்சிலிங் முடிந்த பிறகே, பொது கவுன்சிலிங்கை நடத்திட வேண்டும். இதுகுறித்து தமிழ்நாடு அரசு உடனடி நடவடிக்கை எடுத்து, சமூக நீதியைக் காத்திட வேண்டும் என்று சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்தநாள் விழா

வியாசர்பாடியில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்தநாள் விழா, ஏஎஸ்கே நினைவு மன்றத்தில் கிளைச் செயலாளர் நா.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் லி.உதயகுமார், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆ.சுப்பிரமணி ஆகியோர் மாலை அணிவித்துப் பேசினார்கள். ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் ஏ.அருள், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலப் பொருளாளர் ஆர்.எம்.சந்தோஷ் குமார், கிளைச் செயலாளர் எம்.வெங்கடேசன் உள்பட கட்சியின் முன்னணித் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியைத் திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



இந்தியைத் திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, திராவிடர் கழகம் சார்பில், விருதுநகரில் கண்டன ஆர்ப்பாட்டம் திராவிடர் கழக மாவட்ட தலைவர் நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது. சிவகாசி மாநகர திராவிடர் கழகச் செயலாளர் நரசிம்மராஜ், விடுதலைச் சிறுத்தை கட்சியைச் சேர்ந்த சக்திவேல், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் பாலமுருகன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

சிபிஐ காரியாபட்டி ஒன்றிய துணைச் செயலாளர் ஞானகுமார், விருதுநகர் காதர் முகையதீன், காரியாபட்டி செல்வம், மாதர் சம்மேளன மாவட்டத் தலைவர் மாரீஸ்வரி, காளியப்பன், மலர்கொடி, நாராயணசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பட்ஜெட்டைக் கண்டித்து சிபிஐ – சிபிஎம் கண்டன ஆர்ப்பாட்டம்



ஒன்றிய அரசின் பட்ஜெட்டைக் கண்டித்து திருவண்ணாமலை நகரத்தில், சிபிஎம், சிபிஐ இணைந்து, சிபிஐ நகரச் செயலாளர் பாலாஜி, சிபிஎம் நகரச் செயலாளர் பிரகலாதன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்டச் செயலாளர் இரா.தங்கராஜ், மாவட்ட நிர்வாகக் குழு வே.முத்தையன், த.ராசேந்திரன், சிபிஎம் எம்.வீரபத்திரன் எம்.சிவக்குமார், மாவட்டச் செயலாளர் ப.செல்வன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள். இதில் சிபிஐ எம்.எஸ்.மாதேஸ்வரன், பெ.அன்பு, எஸ்.முருகன் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர்.

## ஏஐடியூசி ஆஷா பணியாளர் சங்க மாவட்டக் குழு கூட்டம்



தருமபுரி மாவட்ட ஏஐடியூசி ஆஷா பணியாளர் சங்கத்தின் மாவட்டக் குழு கூட்டம், மாவட்ட தலைவர் எஸ்.மேனகா தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் கே.மணி, ஏஐஎஸ்எப் மாநிலச் செயலாளர் தினேஷ்குமார், ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் எம்.நவீன்குமார் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்கள். 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ரூ.20 ஆயிரம் வழங்க வேண்டும். செவிலியர் பயிற்சி முடித்த ஆஷா பணியாளர்க்கு கிராம செவிலியர்களாகப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் தருமபுரி மாவட்ட ஆட்சியர் சதீஸைச் சந்தித்து மேற்கண்ட கோரிக்கைகள நிறைவேற்ற வலியுறுத்தி மனு அளிக்கப்பட்டது.

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்ட ஏஐடியூசி ஆஷா பணியாளர் சங்கத்தின் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டப் பொறுப்பாளர் யசோதா தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

## மாநில உரிமையைப் பறிக்கும் தீர்ப்பைக் கண்டித்து மார்ச் 9ல் ஆர்ப்பாட்டம்



சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் தஞ்சாவூரில் மாநிலச் செயலாளர் சாந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் சிறப்புரையாற்றினார்.

எம்.பி.பி.எஸ் தவிர முதுநிலை மற்றும் மருத்துவ மேற்படிப்புகளில் மாநில அரசுகள் தங்களுக்கென வசிப்பிட இடங்களை வைத்துக் கொள்ளக் கூடாது. நாம் அனைவரும் இந்தியாவில்தான் வசிக்கிறோம். எனவே, மாநிலங்கள் தங்களுக்கெனத் தனி ஒதுக்கீடு வைத்துக் கொள்வது என்பது அரசியல் சட்டத்தின் 14 வது பிரிவுக்கு எதிரானது.

அவ்வாறு மருத்துவ இடங்களை வாழ்விட அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதை அரசியல் சட்டம் அனுமதிக்காது. எனவே, அனைத்து முதுநிலை மருத்துவ இடங்களையும், மேற்படிப்பு இடங்களையும் அகில இந்தியாவிற்கும் பொதுவானதாக்க வேண்டும் என்பது போன்ற அடிப்படையில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சிக் கோட்பாட்டிற்கும், சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டிற்கும், அரசு மருத்துவர்களின் இட ஒதுக்கீட்டிற்கும், பெண்களின் உரிமைகளுக்கும் எதிரானதாகவும்,

ஏற்கெனவே, முதுநிலை மற்றும் உயர் சிறப்பு மருத்துவ இடங்களில் 50 விழுக்காடு இடங்களை ஒன்றிய அரசு பறித்துக் கொள்ள உச்ச நீதிமன்றம் வழி வகுத்தது. அதனால் தமிழ்நாடு பெரும் இழப்புகளுக்கு உள்ளாகி வருகிறது.

மிக முக்கியமாக உயர் சிறப்பு மருத்துவ இடங்களில் நூறு விழுக்காடு இடங்களையும் அகில இந்திய ஒதுக்கீட்டிற்காகப் பறித்துக் கொண்டது. எனவே, இதனை கண்டித்து, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் இணைந்து வரும் 09.03.2025 அன்று சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது என்று கூறினார்.

அன்று மாலையில் மருத்துவக் கல்வியும் மாநில உரிமையும் என்ற கருத்தரங்கம் மற்றும் தாய்மொழி அடிப்படையிலான மருத்துவக் கல்வியின் பயன்கள் சிறு நூல் வெளியீட்டு நிகழ்ச்சி மற்றும் தமிழ்நாடு அரசின் தமிழ்த் தென்றல் திரு.வி.க விருது பெற்ற டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் சமூக சமத்துவத்திற்கான மாநில நிர்வாகிகள் டாக்டர் இசட்.முகம்மது புகாரி, டாக்டர் எம்.என்.அப்ரார், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் நிர்வாகிகள், தஞ்சை மருத்துவக் கல்லூரி கே.மதுமிதா, எஸ்.கிஷோர்குமார், புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மா.ஆகாஷ், ஜெ.எஸ்.அர்ஷினி, திருவாரூர் மருத்துவக் கல்லூரி கே.எஸ்.கார்த்திக் இராஜா, எல்.கனிவன், டி.ஹரிகரன், ஜி.அபிஷேக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.3000

கோவை மாவட்டம் சூலூர் தெற்கு வட்டாரம், கட்சியின் வட்டாரக் குழு உறுப்பினர், செல்வராஜபுரம் கிளைச் செயலாளர் சி.ஆர்.மணி, சித்ரா ஆகியோரது இளைய மகன் சஞ்சய் பாரதி, எஸ்.ஜனுஜா ஆகியோரது மணவிழா 10.2.2025 அன்று நடைபெற்றது. இதில் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் வி.எஸ்.சுந்தரம், மாவட்ட துணைச் செயலாளர் மு.குணசேகர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பெ.மௌனசாமி, கே.ரவீந்திரன், கோவை மாநகர் மன்ற உறுப்பினர் பிரபா, வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், துணைச் செயலாளர் வீ.பேரின்பம், மாவட்டக் குழு உறுப்பினர்கள் கே.கண்ணன், பி.சுப்பிரமணியம், எஸ்.கோட்டியப்பன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். அப்போது மணமக்கள் சார்பில், ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூபாய் 3000 அளிக்கப்பட்டது. வாழ்க மணமக்கள்.

## திருப்பூர் மாநகர் மாவட்டக் கிளை மாதாந்திரக் கூட்டம்



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் திருப்பூர் மாநகர் மாவட்ட வடக்குக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் மாநிலச் செயற்குழு உறுப்பினர் த.சசிகலா தலைமையில் பி.சி.இராஜேந்திரன் வரவேற்புரையுடன் நடைபெற்றது. இதில் "அரிக்கேன் விளக்கு" நாவலுக்கு ஆசிரியர் க.கதிரேசன் மதிப்புரை வழங்க, நூலின் ஆசிரியர் எழுத்தாளர் எஸ்.ஏ.காதர் ஏற்புரை வழங்கினார். பாரதி சுப்பராயன் பெரியாரைப் பற்றி உரை நிகழ்த்தினார்.

மாவட்டத் தலைவர் பி.ஆர்.நடராஜன் அமெரிக்கப் பயணத்தின் போது கண்ட கல்வி, மருத்துவம், சுகாதாரம், போக்குவரத்து, தொழில், சட்ட ஒழுங்கை அவர்கள் மதிக்கும் விதம் ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். பால்கி, பெ.இராமன், ஆனந்த பிரபு, பெ. இரவீந்திரன், தரணிதரன், சதாசிவம் ஆகியோர் கவிதை வாசித்தனர். சி.இராமகிருஷ்ணன், து.சோ.பிரபாகர், சித்தன் ஆகியோர் மக்களிசைப் பாடல்கள் பாடினர். அங்குலட்சுமியைப் பாராட்டி மாவட்டப் பொருளாளர் எஸ்.ஏ.காதர் சிறப்பித்தார். ஆசிரியர் என்.அய்யாவு நன்றி கூறினார்.

## காற்று திசை மாறும் கவிதை நூல் வெளியீட்டு விழா

கவிஞர் ந.நாகராஜனின் "காற்று திசை மாறும்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவை தகஇபெ குமரி மாவட்டக் கிளையும், என்சிபிஎச்சும் இணைந்து நடத்திய நிகழ்வுக்கு தகஇபெ மாவட்டத் தலைவர் ச.அனந்த சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார். வந்தனம் கலைக்குழுவின் தர்மசிங் பாடல் பாடினார்.

பெருமன்றத்தின் மூத்த முன்னோடி ஆய்வாளர் செந்தீ நூலின் முதல் பிரதியை வெளியிட, காட்வின், தொழிற்சங்கத் தலைவர் ஆர்.கே.ஸ்ரீகுமார், பேராசிரியர் அ.கா.பெருமாள், தொழிற்சங்கத் தலைவர் அசோகன், தொழிற்சங்கத் தலைவர் சேவியர், பூதை தகஇபெ சிவகுமார், இளம் தொழிலதிபர் ராஜா, தகஇபெ மாவட்டத் துணைத் தலைவர் என் பகவதி ஆகியோர் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்கள். கவிதை நூலை அறிமுகம் செய்து மாநிலத் தலைவர் எஸ்.கே.கங்கா பேசினார். தொடர்ந்து செந்தீ, பேராசிரியர் ஆ.கா.பெருமாள் சிறப்புரை ஆற்றினார், ஹாமீம் முஸ்தபா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். நூலாசிரியர் நாகராஜன் ஏற்புரை ஆற்றினார்.

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றப் புதிய கிளை தொடக்க விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் காஞ்சி மாவட்டக் குழுவின், இலக்கியச் சந்திப்பு, புதிய கிளை தொடக்க விழா பேராசிரியர் ஸ்ரீகுமார் தலைமையில் கல்பாக்கத்தில் நடைபெற்றது. பெருமன்ற மாநிலத் துணைத் தலைவர் டி.எஸ். நடராஜன் தொடக்க உரையாற்றினார்.

இதில் கிளைத் தலைவராக பேராசிரியர் ஸ்ரீகுமாரும், துணைத் தலைவர்களாக சொக்கலிங்கம், ஹேமலதா, பன்னீர்செல்வம் கிங் உசேன் செயலாளராக செ.சகாதேவனும், பொருளாளராக ரவிச்சந்திரனும், இணைச்செயலாளர்களாக வைரமுத்து, அர்ஷத், நிதின், உதயகுமார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்டச் செயலாளர் கவிஞர் சி.இராமலிங்கம், தொழிற்சங்க தலைவர் சங்கையா, ஓவியக்கவி வீரமணி, செங்கை கவி ஆ.கிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

## சேஷசயனம் எட்டாம் ஆண்டு புகழஞ்சலிக் கூட்டம்




தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளனத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் சேஷசயனம் எட்டாம் ஆண்டு புகழஞ்சலிக் கூட்டம், சென்னை ஏஐடியுசி அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மத்திய சென்னை ஆட்டோ சங்கத் தலைவர் மு.சம்பத் தலைமையில் சம்மேளனப் பொதுச் செயலாளர் ப.மாரியப்பன், வடசென்னை ஏஐடியுசி பொதுச் செயலாளர் ஏ.அருள், சுந்தரம், ரவி, சுவாமிநாதன், தட்சிணாமூர்த்தி, சேஷசயனம் குடும்பத்தார் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## உலக தாய்மொழி தினத்தில் தியாகி சங்கரலிங்கனாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



உலக தாய்மொழி தினமான இன்று, தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபத்தில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் மருத்துவர் தா.அறம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயற்குழு உறுப்பினர் நவநீதகிருஷ்ணன், மாவட்டக் குழு உறுப்பினர் ராமசுப்பிரமணியன், சாத்தூர் கிளைச் செயலாளர் கணேசன், ஆசிரியர் ரேவதி, கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன், ஏஐடியுசி போக்குவரத்து பாண்டியன், வங்கி ஊழியர் நாராயணசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிவகாசியில் கவிதைப் பயிற்சி முகாம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சிவகாசி மாநகரம் மற்றும் கந்தகப் பூக்கள் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்திய கவிதைப் பயிற்சி முகாமை சிவகாசி மாநகரச் செயலாளர் முத்து ஒருங்கிணைக்க, எழுத்தாளர் க.சமுத்திரம் அறிமுக உரையாற்றினார். கிளைத் தலைவர் எழுத்தாளர் முத்துபாரதி சிறப்புரை ஆற்றினார்.

முனைவர் பொ.நா.கமலா, எழுத்தாளர் கந்தகப் பூக்கள் ஸ்ரீபதி ஆகியோர் பயிற்றுவித்தார்கள். தொகுப்புரையை டோனி புஷ்பா வழங்க, எழுத்துப் பயிற்சியுடன் கவிதைப் பயிற்சி முகாம் இனிதே நிறைவுற்றது.

## நூல்கள் அறிமுகக் கூட்டம்

தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்றம் காரைக்குடி கிளைக் கூட்டம், மதிப்புறு முனைவர் பறம்பு நடராசனார் தலைமையிலும், மேனாள் மாவட்டக் கல்வி அலுவலர் த.தனுசுகோடி முன்னிலையிலும், மதிப்புறு முனைவர் து.ஈசுவரன் வரவேற்க, முனைவர் மா.நீதி எழுச்சியுரை ஆற்றினார்.

பறம்பு நடராசனார் இயற்றிய 'பைஞ்சுனைப் பூக்கள்', எழுத்தாளர் நாராயணிகண்ணகிஎழுதிய 'வாதி', 'அலர்' நாவல்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

## சிறுகதை உரையாடல்

நாஞ்சில் கத்தோலிக்க கலை, அறிவியல் கல்லூரியில் சிறுகதை குறித்த உரையாடல் அரங்கம் களியக்காவிளையில் நடைபெற்றது. நெறியாளராக கவிஞர் ஹமீம் முஸ்தபா பங்கேற்றார்.

## மாதர் சம்மேளனம் திருப்பூர் புறநகர் மாவட்டக் குழு கூட்டம்



இந்திய மாதர் தேசிய சம்மேளனம் திருப்பூர் புறநகர் மாவட்டக் குழு கூட்டம், மாவட்ட தலைவர் சித்ரா தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக், மாவட்டப் பொருளாளர் வி.பி.பழனிசாமி, மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் பி.நதியா உட்பட மாவட்டக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## இந்திரஜித் குப்தா நினைவு தினம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஏஐடியுசி அகில இந்தியப் பொதுச் செயலாளராக இருந்த இந்திரஜித்குப்தா அவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு தினம், எடமலைப்பட்டி புதூர் வேன் ஸ்டாண்ட் தொழிலாளர்கள் சார்பில், சங்கத் தலைவர் சந்திரசேகர் தலைமையில், செயலாளர் பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட திருவுருவப்படத்திற்கு ஏஐடியுசி திருச்சி மாவட்டப் பொதுச் செயலாளர் க.சுரேஷ் எம்.சி, மலர்தூவி மரியாதை செலுத்தினார். கட்சியின் பகுதிச் செயலாளர் அஞ்சுகம், துணைச் செயலாளர் சரவணன், பகுதிக்குழு உறுப்பினர் நல்லுசாமி உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்கமிட்டி மாநாடுகள்




**அயோத்தியபட்டிணம் தெற்கு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், சேலம் மாவட்டம் அயோத்தியபட்டினம் தெற்கு ஒன்றிய மாநாட்டை, கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் துவக்கி வைத்தார். மாவட்டத் துணைச் செயலாளர் எம்.ராமன், ஏ.கந்தன், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மாநிலச் செயலாளர் பா.தினேஷ், மாவட்டப் பொருளாளர் டி.கண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் இதில் பி.மணி ஒன்றியச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

**அம்மாபேட்டை:** மண்டல மாநாடு, சேலம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் அபிபுல்லா மீராபாய் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் துவக்கிவைத்தார். மாவட்டத் துணைச்செயலாளர் எம்.ராமன்நிறைவு உரையாற்றினார். மண்டலச் செயலாளராக எம்.ஷாநவாஸ்கான் தேர்வு செய்யப்பட்டார்.

**தலைவாசல், கெங்கவல்லி:** கட்சியின் தலைவாசல் கெங்கவல்லி ஒன்றிய மாநாடு ஷாஜகான் இல்லத்தில் நடைபெற்றது. மாநாட்டை மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் தொடக்கிவைத்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என்.கே.செல்வராஜ், எஸ்.தனகோட்டி, என்.எம்.சடையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒன்றியச் செயலாளராக பி.ராஜேந்திரன் தேர்வு செய்யப்பட்டார்.

**வாழப்பாடி:** நீர்முல்லிகுட்டை முருகானந்தம் இல்லத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.கே.செல்வராஜ், எஸ்.தனக்கோட்டி, பா.தினேஷ் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார். ஒன்றியச் செயலாளராக பி.கந்தன் தேர்வு செய்யப்பட்டார்.

**அஸ்தம்பட்டி:** கட்சியின் அஸ்தம்பட்டி மண்டல மாநாடு, மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. மாநாட்டை மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் துவக்கி வைத்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எஸ்.பி.கே.ராமச்சந்திரன், எஸ்.பாலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் இரா.ரமேஷ் நிறைவுரையாற்றினார். மண்டலச் செயலாளராக ஆர்.எல்.முத்து ராஜகோபால் தேர்வு செய்யப்பட்டார்.

## மயிலாடுதுறை மாவட்ட கட்சி அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா, கட்சியின் மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில். கட்டடப் பணி குழு தலைவர் வரதராஜன், பொருளாளர் வழக்கறிஞர் சுந்தரய்யா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அடிக்கல் நாட்டினார். மாநிலக் கட்டுப்பாட்டு குழு ஜி.பழனிசாமி எக்ஸ் எம்எல்ஏ கல்வெட்டைத் திறந்து வைத்தார். நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் சீர்காழி பன்னீர்செல்வம், மயிலாடுதுறை ராஜ்குமார், பூம்புகார் நிவேதா எம்.முருகன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## 3 மாதச் சம்பள பாக்கியை வழங்க வலியுறுத்தி சாத்தூரில் தவிதொச ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலை நாட்கள் அதிகரிப்பு மற்றும் 3 மாதச் சம்பள பாக்கியை வழங்க வலியுறுத்தி வட்டச் செயலாளர் சாமிநாதன் தலைமையில், முத்து வைரம், பாலமுருகன் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் வரதராஜன், சிபிஐ மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

## ப.ரங்கசாமி நினைவு தினம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கரூர் மாவட்டம், தாந்தோணி ஒன்றியம் புத்தாம்பூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், மாநிலக் குழு உறுப்பினருமான பா.ரங்கசாமி 20 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரது படத்திற்கு மாலையிட்டு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி, கொ.வெள்ளையப்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் புத்தாம்பூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆர்.சிவ.சண்முகசுந்தரம், ஆர்.தங்கவேல், வீ.சாமிநாதன், ஈ.புஷ்பா, என்.தங்கராஜ், முத்துக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கட்சி நிதியாக ரூ.5000



எம்.ஆர்.ஆதவன், எம்.ரூபிகா இணையர்களின் நான்காவது திருமண ஆண்டு நிறைவையொட்டி மகள் அருவியோடு மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற போது, கட்சி நிதியாக ரூ.5000 வழங்கப்பட்டது.

## எம்.டி.வாசுதேவன் நாயர் நினைவேந்தல் நிகழ்வு




மலையாள இலக்கிய உலகில் தடம் பதித்த எழுத்தாளரும், திரைக்கதையாசிரியருமான எம்.டி.வாசுதேவன் நாயர் நினைவேந்தல் நிகழ்ச்சி கோவையில், த.நா.கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி தலைமையில் துவக்கத்தில் மறைந்த எழுத்தாளருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

“இறுதியாத்திரை” நூல் பற்றி முனைவர் செ.துரைமுருகன், “நாலுகெட்டு” நூல் பற்றி நாடகவியலாளர் த.திலிப்குமார், “காலம்“ மற்றும் நள்ளிரவும் பகல் வெளிச்சமும் ஆகிய நூல்களை முன்வைத்து வழக்கறிஞர் கே.சுப்ரமணியன், “வடக்கன் வீரகதா” திரைப்படம் குறித்து இஸ்கஃப் மாவட்டச் செயலாளர் எம்.வி.ராஜன், “உத்தரம்“ திரைப்படம் குறித்து ராஜேந்திரன் மற்றும் சிறந்த திரைப்படங்கள் குறித்து எழுத்தாளர் ராமானுஜன் ராகவன் ஆகியோர் உரையாற்றினர். இஸ்கஃப் மாநிலப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் நன்றி கூறினார்.

### புறவழிச்சாலை திட்டத்தை விரைவுபடுத்த கோரி

## அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் கையெழுத்து இயக்கம்




விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் கையெழுத்து இயக்கம் வட்டச் செயலாளர் தினேஷ்குமார் தலைமையில், மாவட்டச் செயலாளர் பகத்சிங் தொடங்கி வைத்தார். அதில் புறவழிச்சாலை திட்டப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும், வருஷநாடு மலைப்பாதைத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும், அரசு மருத்துவமனையைத் தரம்உயர்த்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கையெழுத்து வாங்கப்பட்டது.

இதில் சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, பேரூராட்சி தலைவர் தவமணி, சிபிஐ வட்டச் செயலாளர் கோவிந்தன், துணைச் செயலாளர் மகாலிங்கம் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

### ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரப் பிரதானைக் கண்டித்து

## அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்




கல்வியைச் சிதைக்கும் தேசியக் கல்விக் கொள்கை மற்றும் இந்தி திணைப்பை முன்வைக்கும் மும்மொழிக் கொள்கைத் திட்டங்களை தமிழ்நாட்டில் அமல்படுத்தினால்தான் பள்ளிக்கல்வித்துறைக்கு நிதி தர முடியும் என்று ஆணவத்தோடு கூறிய ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரப் பிரதானைக் கண்டித்து, அனைத்திந்திய மாணவர் பெருமன்ற சார்பில், தென்சென்னை நந்தனம் கல்லூரி, வடசென்னை அம்பேத்கர் கல்லூரி, வேலூர் ஆத்துபாக்கம் கல்லூரி, திருவாரூர் மன்னார்குடி கல்லூரி, திருத்துறைப்பூண்டி கல்லூரி, திருச்சி, தர்மபுரி பாப்பிரெட்டிப்பட்டி கல்லூரி உள்ளிட்டவற்றில் வகுப்புப் புறக்கணிப்பு போராட்டம் நடைபெற்றது.

கோவை, திருப்பூர், சேலத்தில் மாணவர், இளைஞர் பெருமன்றம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கள்ளக்குறிச்சி மற்றும் தேனியில் மாணவர் பெருமன்ற சார்பில் கண்டன இயக்க நடைபெற்றது. டெல்லியில் உள்ள தாமேந்திரப் பிரதானின் அலுவலகத்தை அனைத்து இந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் முற்றுகையிட்டுப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்ட அகில இந்தியப் பொதுச் செயலாளர் தினேஷ் ஸ்ரீரங்கராஜ், தலைவர் வீராஜ் தேவாங், இளைஞர் பெருமன்றப் பொதுச்செயலாளர் திருமலை உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

## கட்சி நூற்றாண்டு வரலாற்று பேரவைக் கூட்டம்






**காங்கேயம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூர் புறநகர் மாவட்டம் காங்கேயம் ஒன்றியம், சிக்கரசம்பாளையத்தில் கட்சி நூற்றாண்டு வரலாறு பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் கட்சியின் மாவட்டப் பொருளாளர் வி.பி.பழனிசாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.நதியா, மாவட்டக் குழு உறுப்பினர் இரா.முத்துசாமி, ஒன்றியச் செயலாளர் எம்.ராஜேந்திரன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் தங்கராஜ், செல்வராஜ், பாலாமணி, கீதா, ஜோதிமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வாகனப் பிரச்சாரம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட மஞ் சாலுமூடு மற்றும் காரோடு கிளைகளின் சார்பில், நூற்றாண்டு விழா மற்றும் தோழர் கே.சந்திரபாபு நினைவு வாகனப் பிரச்சாரம் எ.டென்னிசன் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், ஏஐடியுசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஷ்வநாதன் வாகனப் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்து அரசியல் விளக்கவுரை ஆற்றினார்.


கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.அனில்குமார், ஜி.சுரேஷ் மேசிய தாஸ், மாவட்டக் குழு உறுப்பினர் வி.அருள்குமார், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.செல்வராணி ஆகியோர் பேசினர்.

**கடையம் ஒன்றியம்:** தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றியத்தில், கட்சியின் நூற்றாண்டு பேரவை கூட்டம் என்.ஐயப்பன் தலைமையில், சுடலையாண்டி, மாரியப்பன் கோவிந்தன். முருகையா முன்னிலையில், மத்திய கட்டுப்பாடுக்குழு உறுப்பினர் எம்.செல்வராசு சிறப்புரை ஆற்றினார். மாவட்ட குழு உறுப்பினர் ஈஸ்வரன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**பாப்பான்குளம்**

பாப்பான்குளம் ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் சிவசுப்பிரமணியன் தலைமையில், மத்திய கட்டுபாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராசு சிறப்புரை ஆற்றினார். இதில் எஸ்.வேலாயுதம், ஏ.பரமசிவம் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## போக்குவரத்துக் கழகங்களைப் பாதுகாக்க வலியுறுத்தி தொழிலாளர் சந்திப்பு இயக்கம்



போக்குவரத்துக் கழகங்களைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி சிஐடியு, ஏஐடியுசி மாநிலம் தழுவிய தொழிலாளர் சந்திப்பு இயக்கம் தஞ்சையில், ஏஐடியுசி பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன், சிஐடியு பொருளாளர் எஸ்.ராமசாமி ஆகியோர் தலைமையில் இரண்டு இடங்களில் நடைபெற்றது. நிகழ்வில் ஏஐடியுசி துரை.மதிவாணன், சி.ராஜமன்னன், டி.செந்தில்குமார், பி.முருகவேல், சிஐடியு கே.பிரபாகர், ஏ.சதீஷ் ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதேபோல் கரந்தை புறநகர் பணிமனையில் நடைபெற்ற தொழிலாளர் சந்திப்பு இயக்கத்தில் சிஐடியு தலைவர் டி.காரல்மார்க்ஸ் தலைமையில் நிர்வாகிகள் ராஜசேகர், முருக சக்தி முருகானந்தம் ஆகியோர் பங்கேற்றனர்.

# கார்ப்பரேட்டுகளின் சவாலை எதிர்கொள்ள உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவோம், போராடுவோம்!



அமர்ஜித் கவுர்

**உலக அரசியல் நிலை கார்ப்பரேட்டுகளுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் சாதகமான முறையில் வலதுசாரி திசையில் நகர்கிறது.**

அமெரிக்காவில் ட்ரம்பின் வெற்றி அதற்கு ஒரு அடையாளமாகும். பல்வேறு இனங்கள், நம்பிக்கைகள் கலாச்சாரங்கள் ஆகிய பன்மைத்துவத்தை மதிக்கிற கலாச்சாரத்தை கொண்ட அமெரிக்க சமூகத்தின் சாதனைகளை ரத்து செய்ய விரும்புகிறார். அவரது வெற்றி நிச்சயமாக உலகில் வலதுசாரிகளுக்கு உத்வேகம் அளிக்கும்.

ட்ரம்பின் முதல் அறிவிப்புகள், நாடுகளின் இறையாண்மையை அச்சுறுத்துவது மட்டுமல்லாமல், பிற நாடுகளில் ஆட்சிகளை கவிழ்க்க முயற்சிக்கும் எதிர்கால நிகழ்வுகளை சுட்டிக்காட்டுகின்றன.

பாலஸ்தீனர்கள் தமது சொந்த நாட்டுக்கு திரும்ப உரிமை இல்லை என்றும், காஸா பகுதி அமெரிக்க நிர்வாகத்தின் கீழ் வரும் என்றும் ட்ரம்ப் அறிவிக்கிறார். நேத்தன்யாகு உடன்படுகிறார்.

ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு முதலாளித்துவத்தின் நெருக்கடிகளைத் திசைதிருப்பும் நாடகம் நடக்கிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு எதிராக அலை வீசுகிறது

“உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்” என்பதற்கு எதிர்முழக்கம் இது. பரவலான வேலையின்மை இதன் காரணமாகும். இதனை மையப்படுத்தி தேர்தலில் வெற்றியும் தோல்வியும் அமைகின்றன. வெளிநாடுகளில் இருந்து வந்து வேலை செய்பவரை அகற்றி உள்நாட்டு வேலைகளை அதிகப்படுத்துவோம் என்பது தேர்தல் முழக்கமாகிறது.

இராணுவ விமானங்களில் கையையும் கால்களையும் சங்கிலியால் கட்டி அனுப்பி வைத்தது மனசாட்சியை உலுக்குகிறது.

மெக்சிகோ, கனடா நாடுகளை அச்சுறுத்துவது மட்டுமல்ல; அமெரிக்காவுடன் வர்த்தக உபரி வைத்திருப்பவர்களுக்கு எதிராக வரித் தடைகளை விதிக்கிறது.

முதலாளித்துவ அரசுகள், தமது குடிமக்களின் ஜனநாயக உரிமைகளை, குறிப்பாக தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், அறிவுஜீவிகள், கலைஞர்கள், இலக்கியவாதிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் இயக்கங்களை நசுக்கத் துணிந்துள்ளன.

ட்ரம்ப் வெற்றிக்கு பிறகு, அதற்காக ஏராளமான பணம் செலவழித்த மிகப்பெரும் பணக்காரர் குழுவின் கையில் ஆட்சி வந்து விட்டது என்று அமெரிக்க இடதுசாரித் தலைவரான பெர்னி சாண்டர்ஸ், பல விவரங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதிலிருந்து எலோன் மஸ்க் 120 பில்லியன் டாலர்களையும், ஜெஃப் பெசோஸ் 67 பில்லியன் டாலர்களை சம்பாதித்துள்ளதாக அவர் வெளிப்படுத்தினார். ராணுவம் உள்ளிட்ட அனைத்து கான்ட்ராக்ட்களும் இவர்களுடைய கைகளில் கிடைப்பதற்கு, அமெரிக்க தேர்தலில் டிரம்புக்காக இவர்கள் செலவழித்த பணமே தூண்டிலாகிறது.

எல்ஜிபிடி உள்ளிட்ட சில விஷயங்களில் டிரம்ப் அரசு ஆணைகளை நீதிமன்றங்கள் நிறுத்தி வைத்தன. எலான் மஸ்க்கும், வான்ஸும் நீதிமன்றங்களை மிரட்டுகிறார்கள். டிரம்ப் மீதான வழக்குகள் எல்லாம் இப்போது திரும்பப் பெறப்பட்டுள்ளன.

150 கோடீஸ்வர குடும்பங்கள் அமெரிக்க அரசை வாங்கி விட்டன.

2020ல் இருந்து உலக அளவில் 5 பில்லியன் (500 கோடி) பேர்கள் ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் ஐந்து வணிக நிறுவனங்கள் நமது சொத்துக்களை இருமடங்காக்கி உள்ளன.

இந்தியாவில் தொழிலாளர் சட்டத்தொகுப்புகள் 2025 ஏப்ரல் 1 முதல் செயல்படுத்தப்படலாம். தொழிற்சங்கங்களின் செயல்பாட்டை முடக்கும் நோக்கத்துடன் இது கொண்டுவரப்பட்டுள்ளது. பிரிட்டிஷ்காரன் காலத்திலிருந்து 150 ஆண்டுகளாக போராடி பெற்ற தொழிலாளர்கள் உரிமைகளை இது பறிக்கிறது.

இவை தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையை மறுக்கின்றன; தொழிற்சங்கத்தைப் பதிவு செய்வதை சிக்கலாக்குகின்றன; தொழிற்சங்கத்தின் அங்கீகாரத்தை முதலாளிகளும் அரசாங்கமும் ரத்து செய்துவிட முடியும்; தொழிலாளர் துறை இரு தரப்பையும் அழைத்து நடத்தும் சமரச பேச்சுவார்த்தை முறைமைகள் கைவிடப்படுகின்றன தொழிலாளர் நீதிமன்றங்கள் மூடப்படுகின்றன, அந்த இடத்தில் புதிதாக தீர்ப்பாயம் வருகிறது. தொழிற்சங்கங்களின் பதிவை ரத்து செய்வதற்கு பதிவாளருக்கு கூடுதல் அதிகாரம் தரப்படுகிறது. ‘ஊதியம்’ என்பதற்கான வரையறை மாற்றப்படுகிறது. குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் படி நிர்ணயிக்க வேண்டிய குறைந்தபட்ச ஊதியத்தில் வீட்டு வாடகை உள்ளிட்டவை இனி சேர்க்கப்பட வேண்டியதில்லை.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார சட்டத் தொகுப்பு, ஏற்கனவே தொழிலாளிக்கு இந்த வகைகளில் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை பறிக்கிறது. சட்ட விதிகளை தொழிற்சாலைகள் நிறைவு செய்கின்றனவா? என்பதற்கான ஆய்வுகளை இனி அரசு அதிகாரிகள் நடத்த மாட்டார்கள். “ஃபேக்டரி இன்ஸ்பெக்டர்” என்ற பெயரே “ஃபெசிலிடேட்டர்” (வசதி செய்து தருபவர்) என்று மாற்றப்படுகிறது.

தொழில் தகராறு சட்டத்தில் நூறு பேருக்கு மேல் வேலை செய்யும் ஆலைகளில், ஆலை மூடல், லே ஆப், ஆட்குறைப்பு செய்ய வேண்டுமானால் அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும் என்று இருந்தது. புதிய தொழில் உறவு சட்ட தொகுப்பில் 300 பேருக்கு மேல் வேலை பார்த்தால் தான் அரசிடம் அனுமதி வாங்க வேண்டும் என்று மாற்றப்பட்டது.

70%க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் 300 பேருக்கு கீழ் நிரந்தர தொழிலாளர்கள் உள்ளதாக கூறுகின்றன. அவற்றின் தொழிலாளர்களுக்கு இனி சட்ட உரிமைகள் கிடைக்காது. அவர்களை பணிநீக்கம், ஆட்குறைப்பு மற்றும் மூடல் அபாயத்தில் தள்ளும்.

குறித்த கால வேலைவாய்ப்பு (பிக்சட் டேர்ம் எம்ப்ளாய்மெண்ட்) என்ற பெயரில் பெரிய தொழிற்சாலைகளும் கூட சட்டப் பாதுகாப்பு எதுவுமற்ற தொழிலாளர்களை நியமித்துக் கொள்ள முடியும். காலம் முழுவதும் வேண்டுமானாலும் பயிற்சியாளாக வைத்துக் கொள்ளலாம், அவர்களை நிரந்தரவு செய்ய வேண்டியது இல்லை என்பதும் கொடும் சுரண்டலுக்கு வழிவகுக்கும்

தொழிலாளர் சட்டங்களை மீறுகிற முதலாளிகளுக்கு, ஏற்கனவே இருந்த சட்டம் வழங்கிய குறைந்தபட்ச தண்டனையும் கூட புதிய தொகுப்பில் இல்லை. அதே நேரத்தில் தொழிற்சங்க தலைவர்கள் மீது அற்பமான காரணங்களை முன்வைத்தும் அதீத தண்டனை வழங்க புதிய சட்டம் வழி வகுக்கிறது.

20 தொழிலாளர்கள் வரை வைத்திருக்கும் ஒப்பந்ததாரர் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதை, 50 பேர் வரை வைத்திருந்தால் பதிவு செய்ய வேண்டியதில்லை என்று சட்டம் மாற்றப்படுகிறது. இதைத் தாண்டி அவுட்சோர்சிங் முறை வந்துள்ளது. கான்ட்ராக்டரிடம் கூட சில சட்ட உரிமைகள் பெறலாம். அவுட்டோர்சிங்கில் அதுவும் இல்லை.

தெருக்களில் இறங்கி, பெரிய அளவில் அணிதிரட்டல்களை நடத்தி, தொழிலாளர் சட்டங்களை செயல்படுத்துவதைத் தடுக்க போர்க்குணமிக்க போராட்டங்களைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை.

விவசாயிகளை மட்டுமல்ல, அனைத்து மக்களையும் பாதிக்கிற வேளாண் சட்டத்தை எதிர்த்து சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் கடுமையான போராட்டத்தை நடத்தினார்கள். அந்தச் சட்டங்கள் கிழித்தெறியப்பட்டாலும், புதிய சந்தைப்படுத்துதல் கொள்கைகளின் மூலமாக மீண்டும் அமலாக்கப்படுகிறது.

இதனை திரும்பப் பெறக் கோரி விவசாய அமைப்புகள் போராடத் திட்டமிட்டுள்ளன.


தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் போராடுவதற்கு பொதுவான காரணங்கள் உள்ளன. தொழிற்சங்கங்களை விவசாய சங்கங்களும் ஒருவருக்கொருவர் ஆதரவு அளித்து வருகின்றன. இந்த ஒற்றுமையை மேலும் மேம்படுத்தி ஒன்றுபட்ட தீவிரப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

இந்திய தொழிலாளர்களின் தேசிய மாநாட்டை மார்ச் 18 டெல்லியில் நடத்த மதிய தொழிற்சங்கங்கள் திட்டமிட்டுள்ளன. மே மாதம் ஒரு பொது வேலை நிறுத்தத்துக்கான அழைப்பும், அதற்கு முன்னதாக மக்களிடம் தீவிர பரப்புரை நடத்தவும் மாநாடு அறைகூவல் விடுக்க இருக்கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் நீடூழி வாழ்க

சமத்துவமும், சமநீதியும் அனைவருக்கும் கிட்டவும், சுரண்டல் இல்லாத சமூகத்தை உருவாக்கவும் முன்னோக்கிய நம் பயணம் தொடரும்.

தமிழில் டி.எம்.மூர்த்தி




தமிழ்மக்கள் மீதான இந்தி, சமஸ்கிருதத் திணிப்பை எதிர்த்து

## ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு மார்ச் 6ல் முற்றுகைப் போராட்டம்

### இளைஞர் பெருமன்ற மாநிலக் குழுக் கூட்டத்தில் முடிவு



அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் பிப்ரவரி 25 அன்று மாநிலத் தலைவர் இரா.தமிழ் பெருமாள் தலைமையில் திண்டுக்கல் கே.டி.கே இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில மாநாட்டு நிகழ்வுகள் குறித்தும் எதிர்காலப் பணிகள் குறித்தும் மாநிலச் செயலாளர் க.பாரதி உரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தமிழ்நாட்டின் சமகால அரசியல் நிலைகுறித்து உரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் வாழ்த்துரை வழங்கினார்.

கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர்கள் இரா.ரமேஷ், எம்.செல்வகுமார்,

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

முன்பதிவு துவக்கம்

RUSIND TRAVELS
கோவை, இந்தியா
GSTIN : 33AKKPR8570N2ZB


இணைந்து அழைக்கிறோம்!
தோழர் லெனின் -ஐ பார்த்துவிட்டு
தோழர் லெனினுக்கு செவ்வணக்கம் செலுத்திவிட்டு
செழிப்புமிக்க ரஷ்யாவை
சுற்றிப்பார்க்கலாம் வாருங்கள் தோழர்களே...!

INDRUS TRAVELS
ஸ்டாலின்கிராட், ரஷ்யா
ரஷ்ய பதிவு எண் : 324344300050791

டெல்லியிலிருந்து புறப்படும் தேதி : 10.05.2025
ரஷ்யாவிலிருந்து டெல்லி வந்துசேரும் தேதி : 24.05.2025
(15 நாட்கள்)

- ★ விசா செலவு - ஓட்டல் தங்குமிடம்
- ★ டெல்லி - ரஷ்யா - டெல்லி விமான டிக்கெட்
- ★ ஸ்டாலின்கிராட், லெனின்கிராட், மாஸ்கோ - 3 நகரங்கள்
- ★ லெனின்கிராட் - மாஸ்கோ புல்லட் டிரெயின் டிக்கெட்
- ★ லெனின்கிராட் - மாஸ்கோ உள்ளூர் போக்குவரத்து
- ★ 2 வேளை ரஷ்ய உணவு + 1 வேளை இந்திய உணவு + டீ, காபி, பழங்கள் (சைவம் / அசைவம்)
- ★ மியூசியம், சுற்றுலா தலங்கள் நுழைவு கட்டணங்கள்
- ★ இன்சூரன்ஸ்

இவையனைத்தும்
2,50,000/- மட்டுமே


4வது குழு ரஷ்யா வந்தபோது...

முன்பதிவு கட்டணம்
10,000/-

முன்பதிவு முடியும் நாள்
08.03.2025

முதல் தவணை
1,00,000/-

முதல் தவணை கடைசி தேதி
08.04.2025



தொடர்புக்கு
V.ராஜேந்திரன்
கோவை

பாக்கி தொகை செலுத்திவேண்டிய
கடைசி தேதி :
05.05.2025



rusindtravels@gmail.com
வாட்ஸ் ஆப்-ல் மட்டும்
தொடர்பு கொள்க...
+91 9994311456

14 ஆம் பக்க தொடர்ச்சி

மோ.வெங்கடேசன், அ.ரஞ்சனி கண்ணம்மா, லி.பகத்சிங், மாநிலத் துணைச் செயலாளர்கள்

கோ.சரவணன், கலை. அஸ்வினி, கே.கிருஷ்பாக்கியம் தேசியக் குழு உறுப்பினர் வே.வசந்தகுமார், மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பா.தினேஷ், மாநிலத் தலைவர் க.இப்ராஹிம் உள்ளிட்டு தமிழ்நாடு முழுவதும் இருந்து மாநிலக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




கூட்டத்தில், தமிழ் மக்கள் மீது இந்தி சமஸ்கிருதத் திணிப்பை, தேசிய கல்விக்கொள்கை, மும்மொழிக் கொள்கை ஆகியவற்றை எதிர்த்தும், இளைஞர்களுக்கு எதிரான பட்ஜெட்டைக் கண்டித்தும், திருப்பரங்குன்றம் மலையை மதரீதியான பிரச்சனையாக மாற்றும் சங் பரிவார் மீது நடவடிக்கை எடுக்கவும், மாநில உரிமைகளைப் பறித்தும், யூசிஜி வரைவு விதிமுறைகளை திருத்தக் கோரி உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

◆ மார்ச் 6ம் தேதி பாசிச எதிர்ப்பு முற்றுகைப் போராட்டம்.

◆மார்ச் 23 மாவீரன் பகத்சிங் நினைவுநாளில் தமிழ்நாடு முழுவதும் ரத்ததான முகாம்.

◆ ஏப்ரல் 2 முதல் மே 3 தேதி வரை தமிழ்நாடு முழுவதும் அனைத்து கிராமம் நகரங்களில் இளைஞர் பெருமன்றத்திற்கு 5 லட்சம் உறுப்பினர்களைச் சேர்ப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# இந்தி திணிப்புக்கு எதிராக மாணவர்கள் போர்க்கோலம்




தேசிய கல்விக் கொள்கை மற்றும் இந்தி திணிப்புக்கு எதிராகவும், தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறைக்கு நிதி ஒதுக்க வலியுறுத்தியும் மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், திராவிட முன்னேற்றக் கழக மாணவர் அணி, இந்திய மாணவர் சங்கம், திராவிட மாணவர் கழகம், திராவிட மாணவர் பேரவை, சமூகநீதி மாணவர் இயக்கம், தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ், முற்போக்கு மாணவர் கழகம், முஸ்லிம் மாணவர் பேரவை புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, மக்கள் நீதி மய்யம், மதிமுக மாணவர் அணி, மாணவர் இந்தியா உள்ளிட்ட பல்வேறு மாணவர் அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.













## கோவை பி.என்.புதூரில்
# கட்சி நூற்றாண்டு விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.30,000




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாப்பநாயக்கன் புதூர் தெற்குக் கிளையின் சார்பில் கட்சியின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மற்றும் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் நூறாவது பிறந்தநாள் விழா நடைபெற்றது.

கட்சியின் கிளை அலுவலகத்தில் மூத்த கம்யூனிஸ்ட் தோழர் ஈ.ராமசாமி அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சியில் கட்சியின் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் படத்தினைத் திறந்து வைத்தார். கட்சியின் மண்டல துணைச் செயலாளர் என்.மோகன், பொருளாளர் சி.ஜீவா, மாமன்ற உறுப்பினர் கே.சாந்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாரியம்மன் கோவில் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு, கட்சியின் மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேல் தலைமை தாங்கினார். முன்னாள் மாமன்றக் கல்விக்குழுத் தலைவர் ஆர்.கல்யாணசுந்தரம் முன்னிலை வகித்தார். இதில், கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன், மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மேற்கு மண்டலச் செயலாளர் என்.சந்திரன் ஆகியோர் உரையாற்றினர். கட்சியின் கிளை உறுப்பினர்களுக்குச் சால்வை அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். கூட்டத்தில், ஜனசக்தி வார இதழை நாளிதழாகக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காக, ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.30,000/ வழங்கப்பட்டது. கிளைப் பொருளாளர் அப்துல் சமது நன்றி கூறினார்.




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.